விலை ரூபா 1·25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | புரட்டாதி 1 | முறை 1 | இதழ் 219
யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 17-9-1985

## டில்லியில் இன்று சந்திப்பு

(புதுடில்லி)
புதுடில்லி வந்திருக்கும் ஈழ தேசிய விடுதலை முன்னணித் தலைவர்கள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை இன்று சந்திப்பார்கள்.
திரு. ராஜீவ் காந்தியை இன்று சந்திக்கவுள்ள தலைது உறுப்பினர்களின் பெயர்களை
(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிலைமை: ராஜீவ் கவலை

(கொழும்பு)
இலங்கையில் போர்நிறுத்த உடன்பாடு அமுலில் இருந்த போது ஏற்பட்ட வன்முறைகள் குறித்து இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி கவலைதெரிவித்துள்ளார்.
(8-ம் பக்கம் பார்க்க)

## இரு மாணவர் பலி!

(மட்டக்களப்பு)
செங்கலடிச் சந்தியால் வந்து கொண்டிருந்த இரு பாடசாலை மாணவர்கள் மீது கொமாண்டோப் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவர்கள் இருவரும் ஸ்தலத்திலேயே பலியானார்கள்.
நேற்று மாலை இச்சம்பவம் நடைபெற்றது. (ரா-மா)

## இருவர் பலி

(திருகோணமலை)
திருகோணமலை கன்னியா வீதியில் இடம்பெற்ற கண்ணி வெடிச்சம்பவத்தில் இ.போ.ச பஸ்ஸில் சென்ற இராணுவத்தினரில் 2 பேர் பலியானதாகவும் இருவர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரா-மா)

# நிரந்தர யுத்த நிறுத்தம்

# 'லலித்' நம்பிக்கை!

(கொழும்பு)
போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து கடைப் பிடிக்க அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.
"போர்நிறுத்தத்தை அரசாங் கம்கௌரவிக்கும். அதேபோல் தீவிரவாதிகளும் போர்நிறுத் தத்தைக் கடைப்பிடிக்கவேண் டும்" என்று நேற்று தேசிய பந்தோபஸ்து அமைச்சரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
அண்மைக் காலத்தில் இல ங்கை இனப்பிரச்னை தொடர் பாக ஏற்பட்டுள்ள முன்னேற் றங்களையும் விவாதங்களையும் கவனத்திற்கொண்டும், இப் பிரச்னையில் நீடித்த அமைதித் தீர்வு ஒன்று ஏற்படவேண்டும் என்பதனாலும் இலங்கை அரசு போர்நிறுத்தத்தைத் தொடர் ந்து கடைப்பிடிப்பதென்று முடிவு செய்துள்ளது என அவ் வறிக்கை கூறியது.
கடந்த காலத்தில் போர் நிறுத்தத்தை சில தீவிரவாதக் குழுக்கள் மீறியமையை அரசு கவனத்தில் எடுத்துள்ள அதே சமயம் இந்நிலை மீண்டும் ஏற் படமாட்டாதென்றே அரசு கருதுகின்றது. அவ்வாறு நடக்குமானால் அவ்வாறு நடந்துகொள்ளும் நபர் அல் லது குழுவுக்கு எதிராகப் பொருத்தமான நடவடிக்கை
(8ம் பக்கம் பார்க்க)

### அத்துமீறி நடந்தவர்கள்

## ஆயுதப்படையில் 230 பேர் இடைநிறுத்தம்

(கொழும்பு)
போர்நிறுத்த காலத்தில் அத்துமீறி நடந்துகொண்ட மைக்காக ஆயுதப் படைகளைச் சேர்ந்த 230 பேர் இடைநிறுத் தம் செய்யப்பட்டுள்ளனர்.
இவர்களில் ஐந்து மேலதி காரிகளும் அடங்குவர்.
தேசிய பாதுகாப்பு அமைச் சர் திரு லலித் அத்துலத்முதலி இதை நேற்றுத் தெரிவித்தார்.

## நிலாவெளித் தாக்குதல் 20 பேர் பலி!

(ஏ. வி மாணிக்கம்)
திருகோணமலையில் நிலா வெளிப்பகுதியிலுள்ள தமிழ்த் தீவிரவாதிகளின் முகாம் ஒன்றை நேற்று ஆயுதப்படை யினர் முற்றுகையிட்டு தாக்கு தல் நடத்திய பொழுது 20 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட தாகவும் 85 பேர் சரணடைந் திருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இத்தாக்குதலின் பின்னர் பெரும்தொகையான ஆயுதங் களும், வெடிமருந்துகளும், வானொலி சமிக்ஞை கருவிக ளும் ஆயுதப்படையினரால் மீட்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.
விமானப்படையினரின் உத வியுடன் இராணுவம், கடற் படை, பொலிஸ்கமாண்டோக் கள் இத்தாக்குதல் சம்பவத் தில் ஈடுபட்டதாகத் தெரிவிக் கப் படுகிறது.
தீவிரவாதிகளின் கட்டுப் பாட்டிலிருந்த நிலாவெளிப் பகுதி இப்பொழுது ஆயுதப் படையினரின் வசமாகிவிட் டதாகவும் பாதுகாப்பு அமை ச்சுவட்டாரம் தெரிவித்தது. (மா)

## பிந்திய செய்தி

(லண்டன்)
இலங்கை அரசின் போர் நிறுத்த உடன்பாட்டு நீடிப்பை ஏற்கமுடியாது என்று ஈழ தேசிய விடுதலை முன்னணி தெரிவித்துள்ளதாக பி. ரி. ஐ. செய்தியை ஆதாரம் காட்டி பி. பி. ஸி நேற்றிரவு தகவல் வெளியிட்டுள்ளது. (வ)

### ● வெலிக்கடைச்சிறையில் உள்ள

# தமிழ்இளைஞரைநேரில்பார்க்க உறவினர்களுக்கு அனுமதி!

## அரசஅதிபர் அலுவலகமறியல் போராட்டம் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)
வெலிக்கடைச் சிறையில் உள்ள தமிழ்க் கைதிகளைப்பார் ப்பதற்குக் கைதிகளின் உறவி னர்கள் 15 பேரும் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட 5 பேரும் கொண்ட குழுவிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
யாழ் அரசாங்க அதிபர், பாதுகாப்பமைச்சுச் செயலாள ருடனும், பந்தோபஸ்து அமை ச்சரின் செயலாளருடனும் நேற்றுக் காலை தொடர்பு கொண்டபோது இந்தத் தக வல் தெரிவிக்கப்பட்டது.
கோரிக்கைகள் நிறைவேறும் வரை யாழ் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கத்தை அவ ரது காரியாலயத்தில் தடுத்து வைத்திருப்பது என்று எடுக்கப் பட்ட முடிவைத் தொடர்ந்து நேற்றுக் காலை அரசாங்க அதி பர் காரியாலய வாசலில் மறி யற் போராட்டம் ஆரம்பமா னது.
இந்த மறியலில், சிறையில் உண்ணாவிரதமிருக்கும் இளை ஞரின் பெற்றோரும், யாழ் பல் கலைக்கழக மாணவரும் கலந்து கொண்டனர்.
இந்த மறியலைத் தொடர்ந்து
(5-ம் பக்கம் பார்க்க)

### குண்டு வீச்சைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூடு!

## பருத்தித்துறையில் நேற்று நடந்த சம்பவம்!

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறையில் நேற்றுப் பகல் வாகனங்களில் வந்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததைத் தொ டர்ந்து பெரும் பதற்றம் ஏற் பட்டது.
மக்கள் பாதுகாப்புத்தேடி சிதறி ஓடினார்கள், வர்த்தக நிலையங்கள் பாடசாலைகள் யாவும் உடனடியாக மூடப்பட் டன!
பருத்தித்துறை சுப்பர்மடம் நோக்கி வந்த இராணுவத்தி னர் மீது இனந்தெரியாத இளைஞர்கள் குண்டு வீசிய
(5-ம் பக்கம் பார்க்க)

## "போர் நிறுத்தத்தைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி வேண்டும்"

### ராஜீவிடம் கூட்டுமுன்னணி வலியுறுத்தும்

(சென்னை)
'போர் நிறுத்த உடன் பாட்டை இலங்கை அரசு மனப்பூர்வமாக ஏற்று செயல் படுத்துமானால், புதிய போர் நிறுத்த உடன்பாட்டை ஏற் பதில் ஈழதேசிய விடுதலை முன் னணிக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை' என்று இலங்கை அர சின் புதிய போர் நிறுத்த உடன்பாடு குறித்து கருத்து வெளியிட்ட ஈழதேசிய விடு தலை முன்னணியின் பிரதிநிதி
(5-ம் பக்கம் பார்க்க)

## குண்டுவீசி தாக்க திட்டமாம்! அமிர், சிவா, எச்சரிக்கை

(சென்னை)
"இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் வாழும் பொதுமக்களின் இருப்பிடங் களைக் குண்டு வீசித் தாக்கும் பொருட்டு இலங்கை அரசாங் கம் அதிகளவிலான இராணு வத்தளபாடங்களையும் விமா னங்களையும், ஹெலிகொப்டர் களையும் கொள்வனவு செய்து வரவழைத்துள்ளது" என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு அ. அமிர்த லிங்கமும், தலைவர் திரு மு. சிவசிதம்பரமும் நேற்று சென் னையில் விடுத்த அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ள னர்.
"சமூகவிரோதிகள் எனக் கூறப்படும் நூற்றுக்கணக்கான சிங்களவர்கள் கடந்த சிலவார ங்களில் திருகோணமலைக்கும் வவுனியாவுக்கும் கொண்டு வரப்பட்டு இவர்களுக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்
(5-ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பிறந்தநாள்

(கொழும்பு)
ஜனாதிபதி ஜே. ஆர். ஜெய வர்த்தனா இன்று தமது 79 வது பிறந்த தினத்தை எளி மையாகக் கொண்டாடுகிறார்.

## மதவாச்சியில் இப்படி ஒரு கொடுமை!

(வவுனியா)
வவுனியாவிலிருந்து சென்ற லொறியொன்றில் பிரயாணம் செய்த ஒரு தந்தையும் மகளும் மதவாச்சி பகுதியில் கொடு மைகளுக்கு உட்படுத்தப்பட்ட தாகக் கூறப்படுகிறது.
மன்னாரைச் சேர்ந்த 18வயது முஸ்லிம் இளம்பெண்ணும் அவ ரது தந்தையும் பிரயாணம் செய்ததாகவும், ஓரிடத்தில் லொறி மறிக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டதுடன், அவ்விளம் பெண் கடத்தப் பட்டுப் பலாத்காரம் செய்யப் பட்டதாகக் கூறப்படுகின்றது.

## யாழ். மாவட்ட ஆசிரியர்கள் நடத்திய மௌன ஊர்வலம்

(ஐ. சண்முகலிங்கம்)
யாழ் மாவட்ட பாடசாலை ஆசிரியர்கள் ஆயிரக்கணக்கா கச் சேர்ந்து நேற்று நடத்திய மௌன ஊர்வலம், இறுதியில் யாழ். கல்வித் திணைக்களத்தில் முடிவுபெற்றது.
இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சிறையில் உண்ணாவிரத மிருக்கும் தமிழ் இளைஞர்க ளுக்கு ஆதரவு தெரிவித்தும்,
(8 ம் பக்கம் பார்க்க)

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

லேடிஸ் சைக்கிள் பீனிக்ஸ் பிக் ரூ 1400/-. சிங்கர் காக் மெஷின் ரூ. 2,300/-, குளிர் சாதனப்பெட்டி கெல் ஆர் 60 ரூ 5000/-. காலை 11—12மணி வரை. ஸ்ரீ முருகவிஸ் (எவர் சில்வர்) 140 கே கே எஸ். ரோட், யாழ்ப்பாணம். 756

உடைப்பாவனைக்குரிய இரண்டு பெரியகண்ணாடி அலுமாரிகள் (உயரம் 6' நீளம் 4' அகலம் 2') விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: எவரிசன் வீடியோ சென்ரர், கொட்டடிச்சந்தி, யாழ்ப்பாணம். 740

## தவறிவிட்டது

எனது 632992160V என்ற அடையாளஅட்டை சுன்னாகத்திற்கும் உரும்பராய்க்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் துரையப்பா கதிர்காமநாதன், வீரபத்திரர் கோவிலடி, மல்லாகம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 749

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## தவறிவிட்டது

662851760 இலக்க முடைய எனது அடையாள அட்டை இருபாலை, திருநெல்வேலி, கோண்டாவில் ஆகிய இடங்களில் எங்கோ காணாமல் போய் விட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். விலாசம்: கி. திருமாவளவன், குளக்கண்டி லேன், கோப்பாய் தெற்கு, கோப்பாய். 768

## மணப்பந்தல்

மனதிற்குகந்த வாழ்க்கைத் துணையை கஷ்டமின்றி தேடிக் கொள்ள எமது திருமண சேவையை நாடுங்கள். நியாயமான கட்டணம், நம்பகமான சேவை ஷாஹி ஷீபாஸ் ஏஜென்ஸீஸ். 125, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 663

## அறிவித்தல்

15-09-85 திகதியில் நல்லூரில் இழுக்கப்பட்ட அதிஸ்ட லாபச் சீட்டின் முதலாவது பரிசு விபரம்: இலக்கம் 3755, து. பெரியதம்பி, 85, ஆடியபாதம். யாழ்ப்பாணம். 760

## பிறந்த நாள் வாழ்த்து



பண்டத்தரிப்பு அம்மன் வீதியைச் சேர்ந்த தேவராஜா மேரி கில்டா தம்பதிகளின் மகன் அன்ரன் நிமால் 17-9-1985 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, தொட்டம்மா, தொட்டப்பா மற்றும் அனைவரும் அன்னை வேளாங்கண்ணி அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க வென்று வாழ்த்துகின்றார்கள். 744

## பெண்ணிடம் சங்கிலி அபேஸ்

(வவனியா) வவனியா குசைப்பிள்ளையார் குளம் என்ற இடத்தில் தனிமையாக வீட்டில் இருந்த ஒரு பெண்ணிடம் துப்பாக்கியுடன் சிறுடையில் சென்ற மூவர் அப்பெண்ணைப் பயமுறுத்தி கழுத்தில் இருந்த சங்கிலியை பறித்துக்கொண்டு சென்றுவிட்டனர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

அமரர் சபாபதிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை

தோற்றம்: 12-08-1912



மறைவு: 17-08-1985

எமது அன்புத் தெய்வமே, அன்பின் திருவுருவாய் பண்பாக எங்களைவாழ வழிகாட்டிய எங்கள் தாயே இவ்வுலகை விட்டு அவ்வுலகு சென்றாலும் உங்கள் நினைவுகள் என்றும் எங்கள் மனதில் நிலையாக நிற்கும் உங்கள் ஆத்ம சாந்திக்காக இன்று பிரார்த்தனை செய்யும்:

பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல. 4, செட்டித்தெரு,
நல்லூர். யாழ்ப்பாணம். 734

## ஊறணி புனித அந்தோனியார் கிராம அபிவிருத்திச் சங்கம்

### முக்கிய அறிவித்தல்

எமது சங்கத்தினூடாக காங்கேசன்துறை சீமேந்துத் தொழிற்சாலை 3ம் கட்டத்தில் வேலைசெய்த சகலரையும் அதிகரித்த சம்பளக் கொடுப்பனவு விடயமாக வரும் 21-09-85 சனிக்கிழமை என்னைச் சந்திக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்,
ஊறணி புனித அந்தோனியார்
கிராம அபிவிருத்திச்சங்கம்.

16-09-85 (759)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

சண்டிலிப்பாயைச் சேர்ந்த சுந்தரேஸ்வரி மகள் தர்மவதனியின் மரணசாதன மற்ற மரணச்சொத்துவிடயமாக.

—இறந்தவர்

இல. T. 221

சபாபதிப்பிள்ளை சுந்தரமூர்த்தியும் பெண் மகேஸ்வரியும் சண்டிலிப்பாய்,

—மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணச்சொத்தை திருப்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம்ஆண்டு தை மாதம் 9ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்டுள்ள பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகா தென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1974ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18ம் திகதி.


நீதிமன்றக் கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

தயாரிப்பு:
எம். கே. ஆனந்தம்
மனுதாரின் சட்டத்தரணி.
3-7-85

காரணம் காட்டும் திகதி 25-9-85க்கு நீடிக்கப்பட்டது.
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர். 754

## ஓராண்டு நினைவஞ்சலி

திரு. ஆ.சி.சோமசுந்தரம் அவர்கள்
(முன்னாள் ஓய்வுபெற்ற புகையிரத கட்டிட மேற்பார்வையாளர்)



அன்னையின் மடியில்: 29-11-1906
இறைவனடியில்: 27-09-1984
திதி: 17-09-1985

எம்மையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு பாதி வழியில் மறைந்தாலும், ஐயா! நீங்கள் எங்களை வளர்த்த முறையையும், வாழ்க்கை அமைத்துக் கொடுத்த தன்மையையும், இருந்து வழி நடத்தி வைத்த அன்பு வழிமுறையையும் என்றும் மறவோம். உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்;

உங்கள் அன்பால் வாடும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

''யோகாலயா'',
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய். 762

## 1வது பிறந்ததின வாழ்த்து

### செல்வி வாசுகி



திருநெல்வேலி உமா இன்டஸ்றீஸ் உரிமையாளர் விவேகானந்தராசா, திருமதி விஜிதா விவேகானந்தராசா தம்பதிகளின் செல்வப் புதல்வி வாசுகி தனது முதலாவது பிறந்த தினத்தை (இன்று) 17-09-85இல் தனது பெற்றோருடன் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை

அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, லண்டன் மாமா, திருநெல்வேலி மாமா. அத்தை, பெரியப்பாமார், பெரியம்மாமார், கவிதா அக்கா, உமா, துஷி கிரி மச்சிமார், தினேஸ்தம்பி மற்றும் உற்றார், உறவினரும் பல் கலைகளும் கற்று சீர்சிறப்புடன் துர்க்காதேவியின் அருளாசியுடன் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர்.

ச விவேகானந்தராசா,
7, நிக்கலஸ் லேன்,
சுண்டுக்குளி.

738

# ரத்தத்தின் ரத்தமே என்று எம்.ஜி.ஆர்.பேசியதும்

# மக்கள் கரகோஷம் வானைப்பிளந்தது!

(சென்னை)

தமிழ்நாட்டின் 19வது மாவட்டமாக 'அண்ணா மாவட்டம்' நேற்று முன் தினம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்த மாவட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். திரு ஜி. ராமச்சந்திரன் முறைப்படி தொடக்கிவைத்தார். இந் நிகழ்ச்சியில் முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் தமது குரலில் 'என் இரத்தத்தின் இரத்தமே, தாய்க்குலமே பேரறிஞர் அண்ணா பெயரால் அவரது கொள்கைப்படி இந்த ஆட்சியை நடத்துகிறேன்' என்ற வார்த்தைகளைப் பேசியபோது அங்கு குழுமியிருந்த மூன்று லட்சம் மக்களும் கரகோஷம் செய்து ஆரவாரம் செய்தனர்.

மதுரை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திண்டுக்கல்லை தலைநகராகக்கொண்டு அமைக்கப்பட்ட இந்த மாவட்டம் தமிழ்நாட்டில் 19வது மாவட்டமாகும்.

இம் மாவட்ட தொடக்க விழாவில் தமிழ்நாடு நிதி அமைச்சர் திரு இரா நெடுஞ்செழியன் மின்சாரத்துறை அமைச்சர் திரு எஸ் ராமச்சந்திரன், இந்திராகாங்கிரஸ் தமிழ்நாடு தலைவர் திரு. பழனியாண்டி உட்பட பல அரசியல் தலைவர்களும் அமைச்சர்களும் இதில் கலந்துகொண்டனர்.

மறைந்த முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரையின் 77வது பிறந்த தினத்தில் இந்த புதியமாவட்டம் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் பெரியார் மாவட்டம், காமராஜர் மாவட்டம், முத்துராமலிங்க தேவர் மாவட்டம், அண்ணா மாவட்டம் என நான்கு முக்கிய தலைவர்களின் பெயரால் மாவட்டங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுவீடனில் ஆளும்கட்சி வெற்றி

(ஸ்டொக்கோம்)

சுவீடனில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தற்போதைய பிரதமர் தலைமையிலான ஆளும் சோசலிஷ ஜனநாயகக் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

இக் கட்சி சுவீடனில் தொடர்ந்து 4வது முறையாக ஆட்சிக்கு வந்துள்ளது. எதிர்க்கட்சியான கன்சவேடிவ்கட்சி தோல்விகண்டுள்ளது.

## டிசம்பரில் உள்ளூராட்சி தேர்தல்

(சென்னை)

தமிழ்நாடு உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் டிசம்பர் மாதம் 7ம் திகதி நடைபெறும்.

இத்தகவலை உள்ளூராட்சி அமைச்சர் திரு பா. உ. சண்முகம் சென்னையில் தெரிவித்தார்.

## உலகச் செய்திகள்

தென் பசுபிக் பிராந்தியத்தில்—

## பிரான்ஸின் அணு பரிசோதனைக்கு நியூஸிலாந்து பிரதமர் கண்டனம்!

(வெலிங்டன்)

தென்பசுபிக் பிராந்தியத்தில் பிரான்ஸின் அணுபரிசோதனைத் திட்டங்களையும் அந்த நாடு நடந்துகொள்ளும்முறைகளையும் நியூஸிலாந்துப் பிரதமர் டேவிட் லாங்கே வன்மையாக கண்டித்துள்ளார்.

நியூஸிலாந்தின் தொழிற்கட்சிக்கு அளித்த பேட்டியொன்றில் இந்த கண்டனத்தை அவர் தெரிவித்துள்ளார்.

தென்பசுபிக் பிராந்தியம் ஓர் ஆயுதமற்ற வலயமாக இருக்கவேண்டுமென்று நியூஸிலந்து விரும்புகிறது ஆனால் பிரான்ஸ் இதற்கு மாறாக செயற்படுவதோடு இப் பிராந்தியத்தில் தொடர்ந்து அணுகுண்டுப் பரிசோதனைகளை மேற்கொண்டுவருகிறது அத்துடன் இப்பகுதியில் நடமாடும் சமாதானக் கப்பல்களையும் சேதமாக்கிவருகிறது.

அண்மையில் பிரான்ஸ் ஜனாதிபதி மிட்ராண்ட் இப் பிராந்தியத்துக்கு விஜயம் செய்துள்ளார். அங்கு அவர் உரையாற்றுகையில் நியூஸிலாந்தை 'எதிரி நாடு' எனவும் வர்ணித்துள்ளார். இது மிகவும் கண்டிக்கப்படவேண்டிய விடயமாகும். பிரான்ஸ் ஜனாதிபதி இந்த விஜயம் இப் பிராந்தியத்தில் பிரான்ஸின் அணு ஆயுத விஸ்தரிப்புக் கொள்கையைக் காட்டுகிறது உண்மையில் நியூஸிலாந்து பிரான்ஸின் எதிரி அல்ல. ஆனால் தென்பசுபிக் பிராந்தியம் அணு ஆயுதத்தளமாக மாறுவதனைத்தான் நியூஸிலாந்து எதிர்க்கிறது என்றார்.

# 'நாளும் பொழுதும் இளைஞர் கொல்லப்படுகிறார்கள்!'

## இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் கண்டனம்

(மானிப்பாய்)

ஆட்சியாளரின் தவறான கொள்கைகளினாலும், போக்குகளினாலும் தமிழ் மாணவர் கல்வி சீரழிக்கப்படுவதையும், கல்வியில் சமவாய்ப்பு மறுக்கப்படுவதனையும் தமிழ் மக்களின் உடைமைகள் சூறையாடப்பட்டுச்சொத்துக்கள் அழிக்கப்படுவதனையும், இளைஞர்கள் இருட்டறைகளில் வதைக்கப்படுவதனையும், தான் தோன்றித்தனமாகக் கொன்று குவிக்கப்படுவதனையும்' இராணுவத்தரப்பார் நடத்தப்படுவதனையும் ஆழ்ந்த கவலையுடன் நோக்குவதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் 'ஏன் இந்த ஊர்வலம்? என்ற தலைப்பில வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரத்தில் தெரிவித்துள்ளது

சங்கத்தினர் யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து நேற்று ஆரம்பித்து நடத்திய ஊர்வலம் தொடர்பாக வெளியிட்டுள்ள இத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது!

உலகின் எந்த ஒரு நாட்டிலும் இல்லாத முறையில் மிகக்கொடுமைவாய்ந்த பயங்கரவாதத்தடைச் சட்டமொன்றினை இந்நாடு அமுல் படுத்துகின்றது. இச் சட்டத்தினூடாக நமது பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் வதை முகாம்களில் அடைத்து வைத்து நாளும் பொழுதும் கொன்று குவிக்கின்றது. இவ்வாறாக 'பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவரை 18 மாதங்களுக்குள் நீதிமன்றம் நிறுத்தவேண்டும் இல்லையேல் விடுதலை செய்யவேண்டும்'' என்றது இச்சட்டம் ஆனால் இச் சட்டத்திற்குப்புறம்பாக — 18 மாதங்களுக்கு மேலாக விசாரணைகள் எதுவுமின்றி இளைஞர்களை அடைத்து வைத்திருப்பதனைக்கண்டித்து வெலிக்கடைச்சிறையிலே கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக தமிழ் இளைஞர்கள் தொடுத்துள்ள உயிர்விடும் வரை உண்ணாவிரதப்போராட்டம் நெருக்கடியான பல பிரச்சனைகளைத் தோற்றுவித்துள்ளது.

வெலிக்கடை உண்ணாவிரதப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் உண்ணாவிரதத்தினால் பல்கலைக்கழகப் பரீட்சைகள் யாவும் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர் பாடசாலைக்கு செல்லாமலும் உண்ணாவிரதமிருந்தும் ஊர்வலங்கள் நடத்தியும் இப் போராட்டங்களுக்குத் தமது ஆதரவினைத் தெரிவித்து வருகின்றார்கள் கல்வியே தமிழினத்தின் முற்றுமுழுதான மூலதனம்' நாட்டு நடவடிக்கைகள் மூலதனத்தையே முற்றாக அழிக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது ஈழம் எங்கிலும் ஒரு பாடசாலையேனும் முழுமையாக இயங்காதநிலையே இன்று காணப்படுகிறது

பல பாடசாலைகள் பல மாதங்களாக அகதிகள் முகாம்களாக இயங்குகின்றன ஆயுதப்படையின் கெடுபிடிகள் காரணமாகப்பாடசாலை செல்லாத: செல்ல இடலாத ஆசிரியர்கள் மாணவர்கள்

'பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை அகற்ற வேண்டும் என்ற தமது முன்னைய கோரிக்கையை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

க. பொ. த. ப. உயர்தர பரீட்சை எவ்வித இடையூறும் இன்றி வடக்கு, கிழக்கில் நடைபெறும்போது விடைத் தாள்களை மதிப்பீடு செய்வதை ஏன் வடக்கு கிழக்கில் நடத்த முடியாதா? என்று துண்டுப் பிரசுரம் கூறுகிறது.

## இன்றைய நெருக்கடி நிலையில் ஆறுதல் தருவது திருமுறைப் பாடல்களே

(யாழ்ப்பாணம்)

''எங்கள் நாடு, எமது மொழி என்று நாம் உரிமை கொண்டாடி போராடி வருகின்ற இன்றைய காலகட்டத்தில் எமது நாட்டிலுள்ள பாரம்பரிய கலைகளைப்பற்றிப் பாடுவதும் மிகமிக அவசியமாகும் தமிழர் பிரதேசங்களில் நிலவுகிற நிலைமை, யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழல் இவைகளை மனதில் கொண்டால் எமக்கு ஓரளவாவது ஆறுதல் தருவது எமக்கு உறுதுணையாக இன்று இருப்பவை திருமுறைப்பாடல்களே யாகும்''

இவ்வாறு யாழ் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன், 'இன்னிசைவேந்தர்' பொன். சுந்தரலிங்கம் பாடிய அருட் பாடல்கள் அடங்கிய ஒலிப் பதிவு நாடாக்கள் வெளியிட்டு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் அவர் மேலும் கூறியதாவது:

''சைவசமயத்தை வளர்த்த பெருமை நாயன்மார்களுக்குண்டு. அவர்கள் திருப்பாக்கள்மூலம் இலகுவாக அதனைச் செய்ய முடிந்தது இன்றைய சூழலில் மக்கள் மனதில் அருள் ஒளி பிறக்க திருப்பாக்கள் பாடப்படுவது அவசியம். இப் பணியை நல்ல குருசீட பரம்பரையிடம் கற்ற திரு. பொன். சுந்தரலிங்கம் செய்துள்ளமை பாராட்டத்தக்கது''

விழாவை வடபிராந்திய போக்குவரத்துச்சபைத் தலைவர் திரு சி. லகரத்தினம், யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம், 'சுரஞானகேசரி' கே. கணேசபிள்ளை ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் வாவேந்புரை நிகழ்த்தினார் ஒலிப்பதிவு நாடாக்களில் உள்ள திருப்பாடல்களைப்பற்றிய அறிமுகத்தை பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. எஸ். பதிமநாதன் நிகழ்த்தினார்.

ஆசியுரைகளை நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களும், பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்களும் வழங்கினர். சங்கீத வித்துவான் பரம் தில்லைராசா, நாதஸ்வர கலாநிதி என். கே. பதிமநாதன், லிவகார விதவ மணி என். ஆர். சின்னராசா இளங்கலைஞர் மன்றச் செயலாளர் திரு. எம். இராமலிங்கம் ஆகியோர் திரு. பொன் சுந்தரலிங்கத்தின முயற்சியைப் பாராட்டிப் பேசினார்கள். சிவதமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் வி. என். சிவராசா ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். (ஐ)

## மாஜிஸ்திரேட் நீதிமன்ற தீர்ப்பு; அப்பீலில் ரத்து!

(கொழும்பு)

நகைமோசடி வழக்கில் நீதவான் நீதிமன்ற தீர்ப்பு ஒன்று கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது

பருத்தித்துறையைச் சேர்ந்த செல்லையா சுதரவேலுப்பிள்ளை என்பவருக்கு எதிராக 9,600 ரூபா நகை மோசடி செய்தகுற்றம் சாட்டப்பட்ட வழக்கில் 77 ம் ஆண்டு பருத்தித்துறை நீதிமன்றம் 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத கடூழியச் சிறைத்தண்டனையும் 1500 ரூபா அபராதமும் விதித்திருந்தது. இத் தீர்ப்பை எதிர்த்து சுதரவேலுப்பிள்ளை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்திருந்தார்

நீதிபதிகள் ஜனாப். எம். ஜமீல், திரு சி. எல். ரி. மூனமலே ஆகியோர் முன்னிலையில் இடம் பெற்ற இவ்வழக்கில் எதிரி சார்பில் திரு. க. வெயகுமாரும் அரசுதரப்பில் திரு. ச. சிறிஸ்கந்தராஜவும் ஆஜரானார்கள்.

எதிர்தரப்பு சட்டத்தரணியின் வாதத்தை அடுத்து எதிரியை சுற்றவாளியாகக் கண்ட நீதிபதிகள் முன்னைய தீர்ப்பைரத்துசெய்து எதிரியை விடுதலை செய்தனர்.

## மாஸ்கோ பயணமானார்

(பண்டத்தரிப்பு)

சித்தங்கேணியைச் சேர்ந்த செல்வன் சுந்தரராசா நேசாகரன் சோவியநாட்டின் மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் புலமைப் பரிசில்பெற்று வைத்தியத்துறை பட்டப் படிப்பை மேற்கொள்ளும் பொருட்டு அங்கு பயணமானார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் பழைய மாணவரான இவர் ஏழு வருடங்கள் மாஸ்கோவில் தங்கியிருந்து தமது கல்வியை பூர்த்தி செய்வார் என்றுதெரிவிக்கப்படுகின்றது.

### மணிவாக்கு

சவுக்கடி என்னும் தண்டனையால் இளைஞர்கள் இன்னும் கூடிய கோழைகளாகவும் வேண்டுமென்றே மிகப் பிடிவாதக்காரராகவும் வருவதைவிட வேறெந்தப்பலனையும் நான் காணவில்லை.

—மொன்டெயின்

# நமது நோக்கு

## நாளை நடப்பதென்ன?

நாளை 18ம் தேதியுடன் முடிவடையும் 3 மாதகால போர் நிறுத்தம், இந்த நாட்டில் நடைபெறும் பல கோரக்கூத்துக்கள் வேடிக்கூத்துக்கள்போல் முடிவடைகிறது.

எனவே போர்நிறுத்தம் நீடிக்க வேண்டுமென்ற கோரிக்கை எங்கிருந்துவந்தாலும் அது நம்பிக்கைக்கு பாத்திரமானதா?

குழந்தை தொட்டு கிழவர் வரைக்கும் கேட்கும்கேள்வி- 18ம் தேதி என்ன நடக்கப் போகிறது. நியாயமான கேள்விபோலத் தோன்றினாலும் மடமையைக் குறிக்கும் கேள்வி இது.

போர் நிறுத்த காலத்தில் எவ்வளவு 'போர்' நிறுத்தப்பட்டது. நாட்டுப்பேச்சில் சொல்வதானால் ''சும்மா சொல்லப்படாது, சனப் புழக்கம் போக்குவரத்து, கொடுக்கல் வாங்கல், கல்யாணம்கார்மாதிகள் இக்கால எல்லையில் சிறப்பாக நிறைவேறின'' என்று பலர் திருப்தியடையலாம்.

இவ்வித 'திருப்தியே' இன்று எங்கள் சமூகத்துக்கு தொடர்ந்தும் தொல்லைகள் இருக்கின்றன என்பதைப் புகட்டுகின்றது.

கடந்த வருடத்திலும் இந்த வருடம் இதுவரையிலும் தமிழ் மக்களுக்கு உண்டான உயிர் அழிவு, உடமை அழிவு, சதிகள், கோரக்கொலைகள் இந்த 'போர் நிறுத்தம்' என்பதை ஒரு பாசாங்காக்கிவிட்டது.

எனவே நாளை நடப்பதென்ன? என்பது ஒரு தத்துவ ரீதியில் எழும் வினாவல்ல. யாரறிவார் என்ற விடையும் அவ்வாறே பொருத்தமற்றது 'எல்லாம் எப்பவோ முடிந்தது' என்று ஆழமற்ற முறையில் நுனிப்புல் கடித்து ஆறுதலடைவதும் மடத்தனம்.

நாளைக்குருவாகும் நிலைமைக்கு, நேற்று இன்று நடைபெறும் நிகழ்ச்சிகள் காரணமாகின்றன.

இந்த நாட்டின் தலைவிதிக்குப் பெரும் பொறுப்பேற்றிருக்கும் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் 79வதுபிறந்த தினம் இன்றென்பதை நாம் நம்பிக்கை ஒளியுடன் பார்க்கவேண்டியகட்டாயத்தில் வாழ்கின்றோம்.

ஜனாதிபதியின் தலைமையில் ஐ. தே. கட்சி ஆட்சியின் எட்டுவருடகாலம் முடிவடைந்தது. நாட்டின் முன்னேற்றம் எதுவானாலும் தமிழ் மக்களுக்கு ஒரு இருள் நிறைந்த அத்தியாயம் இதுவென்று எந்த வரலாற்றாசிரியரும் குறிப்பிடத் தயங்கார்.

ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்தவுடனே தமிழருக்கெதிரான கலவரம் ஆரம்பமானது. இன்று வரைக்கும் அது எவ்வாறு வளர்ந்து, பரவி, 83ல் உச்சமடைந்து, ஒரு உள்நாட்டு 'போருக்கு' உயர்ந்து விட்டது. இது அகில உலகும் அறிந்திருக்கும் செய்தி.

தமிழர் பிரச்னை, ஒரு ஆயுதப் போராட்டத்தை தழுவியிருப்பது நாட்டின் அமைதி வாழ்வுக்கும் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கும் பேரிடியாகவிருக்கிறது.

இன்னொருபடி ஏறிச் சொல்வதானால் நாட்டின் பாதுகாப்புக்குமே இப் 'போர்' சவாலாகிவிட்டது.

ஒவ்வொரு கட்டத்திலும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா மனம் தளராது தமது சுதந்திர சிந்தனைத் திறனைக் கையாண்டதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

தமிழர் பிரச்னை தேசிய பிரச்னையென்ற அடிப்படையில் தம்மாலியன்றவரையில் ஒரு சமாதான முடிவை விரும்பி அதற்கு எத்தனங்கள் செய்து ஏமாற்றம்கண்டதும் உண்மையே!

சமாதானம் கிட்டவில்லையென்பது ஒருபுறம், மறுபுறம் தமிழ் போராளிகள் பயங்கரவாதிகளே என்ற கோஷம் ஒரு கொள்கையாக மாறினதும், அதற்கு பரிகாரம் ராணுவ நடவடிக்கை என்பதும், சமாதானம் பேசப்பட்ட போதெல்லாம் அப்பாவி மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்ட சம்பவங்களில் தெளிவாகக் காணப்பட்டது.

லட்சக்கணக்கில் தமிழ் மக்கள் வெளியேறினர். பெரும்பகுதியினர் தமிழகத்தில் புகலிடம்பெற்றனர். அதேசமயம் இந்திய அரசுக்குப் பெரும் பாரமாகவிருக்கின்றனர்.

தமிழ்மக்கள் தங்கள்சொந்த நாட்டில் வாழும் இடங்கள் பல பிணக்காடுகளாகவும், அகதிமுகாம்களில் உயிரைப் பிடிக்க அடிப்படைத் தேவைகள் இன்றி அல்லோல கல்லோலப்படுவதையும் அனுதாபத்துடன் பார்த்த இந்திய அரசு சமாதான முயற்சியில் திடமாகவும் தீவிரமாகவும் ஈடுபட்டது.

இலங்கை அரசின் சீற்றத்துக்கு ஆளான இந்திய மத்தியஅரசு பாரதப்பிரதமர் ராஜீவின் பெருமனம் படைத்த தலைமையில் இலங்கையை நெகிழவைத்தது.

தமிழ்ப் போராளிகள் இலகுவில் ஆயுதப்போராட்டத்தை கைவிடமாட்டாத நிலைமையை உணர்ந்த இலங்கை அரசு இந்தியாவின் சமரசமுயற்சியை வரவேற்றது.

அன்றுதொடக்கம் இன்று வரைக்கும் - மூன்று மாதம்- உருப்படியான உடன்பாடு எதுவுமின்றி மக்களை (சிங்கள மக்கள் உள்ளிட) பணயம்வைக்கும் நாடகம் தொடர்கின்றது. ஆனால் நல்ல முடிவு வராமல் போகாது.

இன்று இப் பிரச்னைக்கு முடிவுகட்டும் பொறுப்பும் வாய்ப்பும் ஜனாதிபதி அவர்கள் கையில் இருப்பதால் இன்றைய சுபதினத்தில் உலக நாடுகளின் பெருந்தலைவர்களின் மிகமுதிர்ச்சியுடைய என்பது வயதை எட்டிநிற்கும் திரு. ஜயவர்த்தனா எதற்கும் தயங்காமல், போர் நிறுத்தத்தை செவ்வனே தொடரவேண்டும். இந்தியாவின் உறுதுணையுடன் தமிழ் மக்களின் துயரைத் துடைக்கமுன்வரவேண்டும்.

நாட்டின் அமைதிக்கும் தமிழ் மக்களின் மறுவாழ்வுக்கும் இத்தினத்தை நழுவவிடாது பயன்படுத்துவது தவிர்க்கமுடியாத தலையாய கடமை.

# இஸ்லாமிய பெருமக்களுக்கு ஹிஜ்ரி 1406 வருடப்பிறப்பு

''இன்று ஹிஜ்ரி 1406 பிறந்துள்ளது. இன்ஷா அல்ஹாஹ் இவ்வருடம் நிச்சயமாக மனிதனுக்கு நிம்மதி, சந்தோஷம் ஏற்படுத்தும் என நம்பலாம்.'

—அகுமது கரீம் அக்பர் ஜின்னா—

இன்று இஸ்லாமிய புதுவருடதினம். சுமார் 1405 வருடங்களுக்கு முன்னால் பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு ஹிஜ்ரத் (நாடு விட்டு நாடு செல்வது) செய்யும்படி இறைவனால் பணிக்கப்பட்டது. மக்காவில் நபிப்பட்டம் கிடைத்த பின் சுமார் 10 வருடங்கள் மக்களை ஏகத்துவத்தின் பக்கம் அவர்கள் அழைத்தார்கள். அப்படி அழைக்கும்போது அவர்கள் பட்ட கஷ்டங்களை வார்த்தைகளினால் வர்ணிக்க முடியாது. சொல்லடி, கல்லடி பட்டார்கள். மிகவும் கேவலப்படுத்தப்பட்டார்கள் அவர்கள் உயிருக்குக் கூட ஆபத்து ஏற்படவும் செய்தது. ஒருசமயம்அவர்களையும் அவர்களைச்சார்ந்தவர்களையும்ஏனையவருடன் பேசவோ,கொடுக்கல் வாங்கல் செய்யவோ முடியாதவாறு ஊருக்கு வெளியே ஒதுக்கிவைக்கப்பட்டார்கள். தன்னைப்பின்பற்றியவர்கள் படும் துன்பங்களைப் பார்த்து இரத்தக்கண்ணீர் வடித்தார்கள் அவர்களை அபிஸீனிய்யா (எதிரோப்பியா) சென்று மன்னர் நஜ்ஜாஷியிடம் அடைக்கலம் கோரும்படி பணித்தார்கள். ஒரு கூட்டம் அங்கு சென்றது. மன்னர் அவர்களை ஆதரித்தார்.

சிலகாலம் செல்ல நாயகம் (ஸல்) அவர்களை மக்காவிட்டு மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்யும்படி அல்லாஹ் கட்டளையிட்டான், ஒருநாள் இரவு நாயகம் (ஸல்) அவர்கள் நண்பர் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் புறப்பட ஆயத்தமானார்கள். வீட்டுக்கு வெளியே வாளேந்தியவர்கள் கட்டாரிகளையும், ஈட்டிகளையும், வில்லையும், அம்புகளையும், கைகளில் ஏந்தியவர்களாக விரோதிகள் திரண்டிருக்க அவர்கள் கண்களில் படாதவாறு நாயகம் (ஸல்) அவர்களும் அவர்கள் நண்பரும் சரித்திரப்பிரசித்தி பெற்ற பிரயாணத்தை ஆரம்பித்தார்கள் அந்தப்பிரயாணத்தைதான் ஹிஜ்ரத் என்று அழைக்கப்படும் அன்றிலிருந்து தான் பின்னர் இஸ்லாமியபுது வருடம் கணக்கிடப்பட்டுவருகின்றது.

ஹிஜ்ரத் செய்யும்படி முஸ்லீம்களுக்கு அல்லாஹ் திருமறையின் மூலமாக தெளிவாக பணித்திருக்கின்றான். அந்தப்பணிப்பு எப்படிப்பட்டது? அல்லாஹ்வுக்காக அவன் அருளிய மார்க்கத்துக்காக அவனது பாதையில் செல்வதைத்தான் ஹிஜ்ரத் எனப்படும். அழகிய கூலிகளை மறுமையில் தரப்படுவதாக அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான். அந்தச்சாயலில் உலக விவகாரங்களுக்காகவும் ஹிஜ்ரத் செய்யப்படும்போது அதுவும் வெற்றியாகஅமைகின்றது. நாடுவிட்டு நாடு சென்று ஆதரவுதேடும்போது ஆதரவு கொடுக்கப்படுவதை இன்று நாம்காணலாம்.

ஹிஜ்ரத் என்பது எமது பார்வைக்கு ஒரு சம்பவ நிகழ்ச்சியாக இருந்தாலும் அதில், முஸ்லீம்கள் மட்டுமல்ல ஏனையவர்களும் பெறவேண்டிய படிப்பினைகள், அறிய வேண்டிய உண்மைகள் பல உண்டு இறைவனின் கற்பனைகளை எம்மால் அறியமுடியாது. இறைவன் நாடியிருந்தால் பிறந்த இடத்தில், வாழ்ந்த இடத்தில், பெருமானார் (ஸல்) அவர்கள் ஏகத்துவத்தின் பக்கம் அழைப்பு விடுகையில் அவர்கள் விரோதிகளை அவர்களுக்கு வழிப்படச் செய்திருப்பான். அது அவனால் முடியும்! ஆனால் அவன் அப்படிச் செய்யவில்லை. ஏன் மனிதனை சமுதாயம் வருங்காலத்தில் பிடிப்பினைப்பெற்று முயற்சியின் அடிப்படையில், தியாகத்தின் அடிப்படையில்தான் வெற்றி நிச்சயம் உண்டு என்பதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் நாடுதுறக்கும்போது ஆபத்துக்கள், பிரச்னைகள் மேலோங்கியிருந்தன. இந்நேரத்தில்தான் ஹிஜ்ரத் என்னும் செயல் முறைத்திட்டத்தை அல்லாஹ் வகுத்தான் பின்னர்வரக்கூடிய மனித சமுதாயம் இப்படியான சூழல் ஏற்படும்போது ஹிஜ்ரத் செய்யவேண்டிய நிலையில் வெற்றியை தனதாக்கிக்கொள்ளும் என்பதை தெளிவாக உணர்ந்துகொள்வதற்காக!

(5-ம் பக்கம் பார்க்க)

### இன்று நினைவு தினம

## பன்மையில் ஒருமை கண்ட பாவலர் திரு. வி. க.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பாரத நாட்டில் தோன்றிய தியாகசீலர்களில் திரு. வி. க. வும் ஒருவர். திரு. வி. க. என அன்புடனும், மதிப்புடனும் அழைக்கப்படும் திருவாரூர் விருத்தாசலம் கலியாணசுந்தர முதலியார் தென்னிந்தியாவிலுள்ள துள்ளம் என்னும் ஊரில் விருத்தாசல முதலியாருக்கும், சின்னம்மாள் அம்மையாருக்கும் ஆறுவது பிள்ளையாக 1883-ம் வருடம் ஆகஸ்ட் திங்கள் 26 ம் நாள் பிறந்தார். தமது மூதாதையரின் ஊரான திருவாரூரையும் தனது பெயருடன் இணைத்துக்கொண்டார்.

சிறுவயதிலிருந்தே துணிவும், துடிப்புமுள்ளவராக விளங்கிய கலியாணசுந்தரன், கல்வி, விளையாட்டு ஆகியவற்றில் முதல் மாணவனாகத்திகழ்ந்தார். மெற்றிக்குலேசன் பரீட்சையில் சித்தி எய்திய திரு. வி. க. அவர்கள் சென்னை வெஸ்லியன் கல்லூரியில் தமிழாசிரியனாகப் பணியேற்றார். தென்புலோலியூர் சதாவதானி கதிரவேற்பிள்ளையிடம் தமிழ் இலக்கியம், இலக்கணம், நிகண்டு ஆகியவற்றைத்துறை போகக் கற்றார். நாளடைவில் போதனாசிரியர் தொழிலைவிடுத்துப் பத்திரிகை ஆசிரியனாகப் பொறுப்பேற்றார். நவசக்தி, தேசபக்தன், ஆகிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியனா

—பொ. ச. ஞானசிலன—

5-ம் பக்கம் பார்க்க)

இன்று அமரர் கு. வன்னியசிங்கம் தினம்

## தியாகத்தால் உயர்ந்த செம்மல்

செந்தமிழ் என்ற தேன்நிகர் மொழியின்
வளர்ச்சி குறித்தே உயிர் உடல் அனைத்தும்
தியாகம் செய்த சீரிய செம்மல்
தமிழரின் அன்பு தமிழரின் மதிப்பு
சொத்தென ஈட்டிய அரசியல் ஞானி
தனக்கென வாழ்தல் அறியான் ஆகித்
தமிழ்க்கென வாழ்ந்த தியாகம் பற்றி
ஈழத் தமிழர் மட்டுமே அன்றி
உலகத்தமிழர் அனைவரும் போற்றினர்
உளத்தாற் பொய்யா தொழுகிய பண்பன்
உலகோர் உளத்தே உள்ளனன் நன்றே.

— முரளி

## உன் உளமுங் கல்லோ!

இராகம்: தர்பார்

தாளம்: ஆதி

பல்லவி

உருவத்திரு மேனி கல்லோ - உன்
உளமும் கல்லோ கல்லோ (உ)

அநுபல்லவி

பெருகும் அடியார்துன்பம் போக்கி அருள் பாலிப்பாய்
பேரானை மாமுகத்து பெம்மான் எனக்கிரங்க
(உ)

சரணம்

கல்லும் கரையுமப்பா கசிந்துனை வேண்டி நின்றேன்
காப்பாற்ற யாருமின்றி கஜமுகா துணை என்றேன்
அல்லும் பகலும் உந்தன் அடிமலர் தூவுகின்றேன்
தொல்லைகள் தீர்த்திடாதோ தூமணிய கணேசா
(உ)

அல்வாயூர் எஸ். தம்பிஐயா

இன்று அல்வாய் சாமணந்தறை ஆலடிப் பிள்ளையார் தீர்தோற்சவம்

# ஆலால், தர்மர் மரணங்கள் கொலையெனதீர்ப்பு;விசாரணை செய்ய பொலிஸாருக்குக் கட்டளை!

(கா. யோகநாதன்)

முன்னாள் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், முன்னாள் கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோரின் மரணங்கள் கொலை யென யாழ். நீதவான் எஸ். நாகராசா நேற்று தீர்ப்பளித்தார்.

யாழ். நீதிமன்றத்தில் நேற்று நண்பகல் இவ்விரு மரணவிசாரணைகளும் நடைபெற்றன.

சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் என். சரவணபவானந்தன் சாட்சியத்தை தொடர்ந்து தீர்ப்பு வழங்கப் பட்டது.

தீர்ப்பில் பொலிஸாரைத் தொடர்ந்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் கட்டளையிட்டார்.

ஆலாலசுந்தரத்தின் மரண விசாரணையில் சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி என் சரவணபவானந்தன் கூறியதாவது ஆலாலசுந்தரத்தின் உடலில் 13 வெளிக்காயங்கள் காணப்பட்டன 1, 2, 3 உள் புகும் காயங்களாகும் 12, 13 காயங்கள் வெளியேறிய காயங்களாகும். வெளிக்காயங்கள் 1, 2, 3 சம்பந்தமாக உள் காயங்கள காணப்பட்டன வெளிக் காயங்கள் 4 முதல் 10 வரை உரசல் காயங்களாகும். காருக்குள் ஏறும்போதோ, அல்லது இறங்கும்போதோ இழுபறிப் பட்டபோது இக்காயங்கள் ஏற்பட்டிருக்கலாம்.

உடலில் காணப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் குறைந்த வேகமுள்ள 'றைபிள்' துப்பாக்கியினால் ஏற்பட்ட காயங்களாகும்.

இருதயம் துவக்குச் சூட்டினால் சேதமடைந்ததினால் உடனடியாக இறந்துள்ளார். என் அபிப்பிராயப்படி இருதயத்திற்கும் மூக்சுப் பைக்கும் ஏற்பட்ட துப்பாக்கிசூட்டுக்காயத்தினால் இரத்தப் பெருக்கும், அதிர்ச்சியும், மரணத்திற்கு காரணமாக இருந்தன, (க


### யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் தரம் 6 (ஆண்டு 7) பிரவேசப் பரீட்சை 1986.

மேற்படி பரீட்சை 1985-11-23ந் திகதி சனிக்கிழமை பின்வரும் பாடசாலைகளில் குறித்தொதுக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக யாழ். பிரதேசக் கல்வித்திணைக்களத்தினால் நடாத்தப்படும்.

1. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.
2. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.
3. கொக்குவில் இந்துக் கல்லூரி.
4. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
5. யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி.
6. சாவகச்சேரி இந்துக்கல்லூரி
7. தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.
8. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.
9. வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி ம. ம. வி.
10. பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.
11. பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி.
12. நெல்லியடி ம ம. வி.
13. வசாவிளான் ம. ம. வி.

பின்வரும் மாதிரிப் படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மேற்படி அதிபர்களால் 1985-10-10ந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப் படிவத்துடன் பிரவேசக்கட்டணம் ரூபா மூன்று (ரூபா 3/-) விண்ணப்பிக்கும் பாடசாலை அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர்.
கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம். 1985-09-16

### மாதிரி விண்ணப்பப்படிவம்

அதிபர்,
யா/.............................................

யாழ். மாவட்டத்தில்
தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில்
தரம் 6 (ஆண்டு 7)
பிரவேசப் பரீட்சை 1986

1. மாணவர் பெயர்:-
2. பால்:-
3. பிறந்த திகதி:-
4. தற்போது படிக்கும் வகுப்பு:-
5. தற்போது படிக்கும் பாடசாலை:-
6. சாதியம்:-
7. சமயம்:-
8. பெற்றோர் / பாதுகாவலர் பெயர்:-
9. முகவரி (நிரந்தரம்):-
10. பிரவேசம் விரும்பும் பாடசாலைகள்:- 1.
2.

(விண்ணப்பம் அனுப்பும் பாடசாலை தவிர்ந்த தெரிவு செய்யப்பட்ட 13 பாடசாலைகளில் இரண்டின் பெயரையே குறிப்பிடவேண்டும்.)

மேலே தரப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையென உறுதிப்படுத்துகின்றேன்.

பெற்றோர் / பாதுகாவலர் கையொப்பம்.

மாணவர் தற்போது கல்வி கற்கும் பாடசாலை
அதிபரின் உறுதியுரை

மேற்படி மாணவன் / மாணவி தற்பொழுது 5ம் தரத்தில் படிக்கிறார் எனவும் 19......... திகதி பிறந்தவர் என்பது பாடசாலையிலிருக்கும் பிறப்புச் சாட்சிப் பத்திரப்படி சரியெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

பாடசாலையின் பெயர்:-
திகதி:- அதிபரின் கையொப்பம்.

761


## பன்மையில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விளங்கினார்: பத்திரிகைத் துறையில் ஒரு புதுப்பாணியை மேற்கொண்டார் பண்டிதர் தொடக்கம் பாமரர் ஈறாக சகலரும் பயிலக் கூடியதாகதனது வசனநடையினை கையாண்டார். நறுக்குத் தெறித்தாற் போன்ற சிறிய வசனங்களைக் கொண்டது அவரது நடை. சகலரும் சோர்வும் சலிப்புமின்றி பயின்று இன்புறலாம் திரு. வி. க. வின் உரைநடைக் கடலில் ஒரு சிறு திவலை.

"காலையிலே நீலக் கடலிலே இளஞ் செஞ்ஞாயிறு எழுகிறது அது நிலத்தின் மீது தவழுங் காட்சியைத் தமிழன் தமிழில் இசைக்கின்றான் ஆரியன் ஆரியத்தில் ஓதுகிறான். ஆங்கிலேயன் ஆங்கிலத்தில் பகர்கிறான்: மற்றவர் மற்ற மொழிகளில் புகல்கிறார். மூலம் ஒன்று மொழி வேறு. வியாசர் கண்டதை சோக்ரதர் கண்டார். வால்மீகி கண்டதை ஷேக்ஸ்பியர் கண்டார். காளிதாசன் பார்த்ததை கம்பர் பார்த்தார்; சம்பந்தர் பார்த்ததை ஷெல்லி பார்த்தார். சேக்கிழார் நோக்கியதை மில்டன் நோக்கினார். சங்கரர் கண்டதை காண்ட் நோக்கினார் என்ன வேற்றுமை? எங்கே வேற்றுமை? எல்லார் மனமும் ஒன்றிலேயே தோய்ந்தது. மொழிகள் மட்டும்வேறு வேறாகத் தோன்றுகின்றன. ஆனால் அவைகளின் பிறப்பிடம் ஒன்றே. அது நாதம்: நாதம் காரணம். மொழி காரியம். பலபடல் இயல்பு" (திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள்)

திரு. வி. க. ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர் கேட்போர்மனதைக் காந்தம் போல கவரக்கூடியது அவரது பேச்சு சமயம், சீர்திருத்தம். இலக்கியம். அரசியல் ஆகியதுறைகளில் ஆழ்ந்த அறிவுடன் மணிக்கணக்கில் உரையாற்றக் கூடிய வல்லமை பெற்றவர்

தமிழ்நாட்டில் தொழிலாளர் இயக்கத்தினை தோற்றுவித்த பெருமைக்குரியவர் திரு வி. க.

திரு. வி. க. ஒரு விடுதலை வீரன் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் அடிமைவிலங்கை விலக்கி எறிய புறப்பட்ட விடுதலை வீரர்களுள் தன்னையும் ஒருவனாக்கி நாட்டின் விடுதலைக்காக உழைத்தார்

சீர்திருத்தம், பெண்விடுதலை ஆகிய முற்போக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டார். பாரத நாட்டில் மலிந்திருந்த மூடக் கொள்கைகள், பெண்களை அடிமைப்படுத்தல், சாதிப்பாகுபாடு என்பனவற்றிற்கு எதிராகப் போர்க்கொடி தொடுத்தார்.

தனக்கென வாழா பிறர்க்கென வாழ்ந்த இப்பெருந்தகை 1953ம் வருடம் செப்டம்பர் மாதம் 17ம் நாள் தனது பூதவுடல் நீத்து புகழுடம்பெய்தினார்.

## குண்டு வீசித்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வன. முன்னாள் எம். பி இரா. சம்பந்தன் வீடு உட்படபலகட்டடங்களுக்கு தீவைத்து பலர் கொலை செய்யப்பட்டதற்கு இவர்களே பொறுப்பு' என்றும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

(அ)

## செஞ்சிலுவைச்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவர் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

புதிய போர் நிறுத்த உடன்பாட்டை மேற்பார்வைசெய்ய செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அதிகார சார்பற்ற சர்வதேச அமைதிப் படையைச் சேர்ந்த நடுவர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்று பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை இந்த முன்னணி வலியுறுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். (து)

## பருத்தித்துறையில்'

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைத் தொடர்ந்து மேற்கண்ட சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது

இக்குண்டு வீச்சு சம்பவத்தில் இராணுவ வீரர்கள் சிறு காயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இராணுவ வீரர்களை முகாமுக்குக் கொண்டு சென்று சேர்த்தபின்னர் திரும்பிவந்த இராணுவத்தினரே இவ்வாறு துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள் என்று கூறப்படுகிறது. இதனால் ஏற்பட்ட சேதவிபரம் உடனடியாகத் தெரியவில்லை.

[ஐ]

## இஸ்லாமிய

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இது உலக விவகாரங்களுக்காக அல்லாஹ் வகுத்த சுற்பனை!

மக்காவை விட்டு மதீனாவுக்கு ஹிஜ்ரத்செய்து 13 வருடகாலத்தின்பின் மக்கா வெற்றி கொள்ளப்பட்டு, எந்த வினாடியும் உயிரை அர்ப்பணம்செய்யக்கூடிய பல்லாயிரக்கணக்கான தோழர்களை நாயகம் (ஸல்) அவர்கள்உருவாக்கியதை இஸ்லாம் எமக்கு எடுத்துக் கூறவில்லையா? நீதி நிலைநாட்டப்பட, அநீதி அழிக்கப்பட, ஏகத்துவம் மேலோங்க நாயகம் ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்தது இன்று எமக்கு முன்னுவாக அமைந்துள்ளதைக் காணுகின்றோம்

இம்மனித சமுதாயத்தினர் அனைவரும் நாயகம் ஸல் அவர்கள் உம்மத் இப்படி இஸ்லாம் கூறுகின்றது இந்த அடிப்படையில் பார்த்தால் இம் மனித சமுதாயத்தில் எங்காவது ஒரு மூலையில் ஒரு சலனம் ஏற்பட்டு அதனால் பிரச்னைகள் ஏற்படத்தான் செய்யும். மக்கள் விரண்டோடுவார்கள். அவர்கள் ஓட்டம் பின்னர் நிம்மதியான நடையாக மாறிவிடும். இதுதான் ஹிஜ்ரத் தரும் தத்துவமாகும் உண்மையான உபதேசமாகும்!

இன்று ஹிஜ்ரி 1406 பிறந்துள்ளது இன்ஷா அல்லாஹ் இவ்வருடம் நிச்சயமாக மனிதனுக்கு நிம்மதி, சந்தோஷத்தை ஏற்படுத்தும் என்பதை நம்பலாம். பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறைகளை முழு மனித சமுதாயமும் பின்பற்றினால் உலகில் பிரச்னைகளுக்கு இடமேயில்லாமல்போய்விடும் மறுமையில் வெற்றியும் கிடைக்கும்.

## வெலிக்கடை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர் மேலதிகாரிகளுடன் தொடர்புகொண்டபோது வெலிக்கடைச் சிறையிலுள்ள இளைஞர்களைப் பார்க்க அனுமதி வழங்கப்பட்டது இதனைத் தொடர்ந்து காலை 9மணிக்கு ஆரம்பமான மறியல் காலை 10-30 மணிக்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டது

வெலிக் கடையில் 18 மாதத்திற்கு முன்னர் கைதுசெய்யப் பட்டுள்ள இளைஞர்களின் உறவினர் ஒருவர் உடனடியாக யாழ். பல்கலைக்கழக மாணவர் அவையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகள்

அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரிலுள்ள கோரிக்கைகள் வருமாறு:-

"18 மாதத்திற்கு மேலாகக் கைதுசெய்யப்பட்டு உண்ணாவிரதமிருக்கும் இளைஞர்களின் உண்மை நிலையைத் தெரிவிக்க வேண்டும்.

"இளைஞர்களின் பெற்றோர் அல்லது உறவினர்களின் பிரதிநிதியை நேரில் பார்வையிட அனுமதிக்கவேண்டும்.

"18 மாதத்திற்கு மேலாகச் சிறையிலிருப்பவர்களை விசாரணை செய்யவேண்டும் அல்லது விடுதலை செய்யவேண்டும்".

(க)


### கடைசி நேர வரிவிளம்பரம்

#### தவறிவிட்டது

787 மாதகல் மினிபஸ்ஸில் ஒரு தொகைப்பணம் மணிபேர்சுடன் 16 9 85ல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்குறிப்பிட்டிருக்கும் விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் என். வி. சே கந்தையா அன் சன்ஸ், கன்னாதிட்டி யாழ்ப்பாணம். (766)

### அதிஷ்டலாபச் சீட்டில் முடிவு பற்றிய அறிவித்தல்

வேலணை கிழக்கில் என்னால் நடத்தப்படும் (15-9-1985) நண்பர்களுக்கான அதிஷ்டலாபச் சீட்டின் இம்முறை தெரிவின் போது வேலணை தெற்கு துறைமுகத்தைச் சேர்ந்த பிள்ளைய ரீ நடராசா(கட்டடத்தொழிலாளி) என்பவர் அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்பட்டு உடன் ரூபா ஆயிரம் வழங்கப்பட்டது.

விபரங்கட்கு:-
M. துரைராசா
C/o V S கனகரட்ணம்
சங்கலர ஸ்ரோர்ஸ்,
செல்வநாயகம் வீதி,
(771) வேலணை2.

### "மண்சுமந்த மேனியர்"
(நாடகம்)

### "எங்கள் மண்ணும் இந்த நாட்களும்"
(கவிதா நிகழ்வு)

ஆகியவற்றின் பாடல்கள் பதிவுசெய்யப்பட்ட கசெற்றுகள் விற்பனைக்கு கிடைக்கும். STEREO முறையில் சிறப்பாக பதிவுசெய்யப்பட்ட MAXELL CASSETTE களின் விலை ரூபா 50/-

கிடைக்கும் இடம்:
மாணவர் அவை, யாழ். பல்கலைக்கழகம்.

770

# "இளம் சமுதாயம் விழிப்புடன் செயற்பட வேண்டும்"

## 'இந்து இளைஞன்' வெளியீட்டு விழாவில் ஆதீன முதல்வர் கருத்து

(வண்ணார்பண்ணை)

"சமயத்துறையில் எதிர்கால வழிகாட்டிகள் இல்லாத நிலை ஏற்படாதிருக்க, இக்கால இளம் சமுதாயம் விழிப்புடன் செயற்படவேண்டும். சமயத்துறையிலும், கலாசாரத் துறையிலும் இளம் சமுதாயத்தை அழைத்துச் செல்ல வேண்டிய பணி இந்து இளைஞர் பேரவை போன்ற சமய ஸ்தாபனங்களில் தங்கியுள்ளது."

இவ்வாறு "இந்து இளைஞன்" பத்திரிகையை வெளியிட்டு வைத்து ஆசியுரை வழங்கிய நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் கூறினார்

ஆதீன மண்டபத்தில் இடம் பெற்ற இவ்வெளியீட்டு வைபவத்திற்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத்தலைவர் திரு. தி. சி. சண்முகலிங்கம் தலைமைவகித்தார்.

இந்து இளைஞர் பேரவையினால் வெளியிடப்பட்ட இப் பத்திரிகையின் முதல்பிரதியை சைவபரிபாலன சபையின் செயலாளர்களில் ஒருவரான திரு த சண்முகலிங்கம் ஜே. பி. பெற்றார். இதையடுத்து சிறப்புப் பிரதியை சிவநெறிப் புரவலரும், மின்சவைத் தொழில் அதிபருமான திரு. க. கனகரசா பெற்றார். இதைத் தொடர்ந்து பேரவைத்தொண்டர்கள் விற்பனையை ஆரம்பித்தனர்.

ஆதீன முதல்வர்தொடர்ந்து பேசுகையில் ஐந்து ஆண்டுகள் சிறப்பான சமய வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு வந்த இப் பேரவை இப்பத்திரிகையை வெளியிடுவதன் மூலம் தனது பணியை மேலும் விஸ்தரிப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இப்பணிவளர சகல சைவமத மக்களும் தமது ஆதரவை வழங்கவேண்டும் என்றார்.

# 'அந்தத்' தமிழகம் நோக்கி .....

— தி. பொன்னம்பலவாணர்

[7]

திருச்சிநகருக்கு அண்மையில் உள்ள முருகன் திருத்தலம் வயலூர். இதனைக் 'குமார வயலூர்' என்று சொல்வர்;

தமிழ் நாட்டின் தலைநகரமான சென்னை மாநகரத்தின் ஒரு பகுதியில் விளங்குவது வடபழனி என்னும் முருகன் திருத்தலமாகும்.

இவ்விரு தலங்களுக்கும் தனித்துவமான ஒற்றுமைகள் உள;

இருதலங்களுமே மலைகளாக இல்லாமல்; சமதரையான பூமியில் அமைந்து விளங்குவது ஒரு ஒற்றுமை யாகும்

குறிஞ்சித்தெய்வமென்று மலையையும் மலைசார்ந்த இடங்களையுமே தனக்கு உகந்த இடமாகக் கொள்பவன் முருகன் என்ற கருத்துக்கு மாறிலா மலையே பிற இடங்களிலும்

...யையும் உணர்துவதாயிருக்கிறது.

வயலூர் ஆலயத்தில் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவோர் திருமணம் புரிந்து கொள்ள விரும்புவோருக்கு வேண்டிய பலவசதிகளும் உண்டு.

ஆதிநாதர் - ஆதிநாயகி என்ற திருப்பெயர்களுடன் சிவனும் உமையும் கோவில் கொண்ட சிவாலயத்தின் உள் வீதியில் சிவபெருமானின் மூலஸ்தானத்திற்கு நேர் பின்புறமாக அதாவது 1-ம் வீதியின் மேற்குத் திசையிலே அமைந்திருப்பது தான் வயலூர் முருகனின் ஆலயமாகும்;

நல்லூர், மாவிட்டபுரம், பழனி, செந்தூர் முதலிய

## வயல்கள் நிறைந்த திருச்சி வயலூர் திருமுருகன் ஆலயம்

முருகன் உவப்போடு இருப்பான் என்பதற்குச் சான்றான பிரபலத்தலங்களாக இவ்விரு தலங்களும் உள்ளன

திருவண்ணாமலையில் முருகனருளை முதல்முதல் பெற்ற அருணகிரிநாதர் திருப்புகழ் பாடும் ஆணையை முருகனிடம் வயலூரிலேயே பெற்றிருக்கிறார் இவ்வுண்மையை அறிந்தவர்க்கு ஞாபகப்படுத்தவும் அறியாதவர் அறியவும் கூடியதாக வயலூர் கோபுரவாயிலில் அருணகிரிநாதரும் திருபாலந்தவாரியாரும் முருகனை வணங்கி மகிழும் ஓவியம் காட்சியளிக்கின்றது

வாரியார் சீவந்தராயிருக்கும்போதேஇவ்வோவியம் விளங்குவது வயலூர் முருகனின் அருட்பெருமையையும் வாரியாரின் தூய்மையான தகுதி முருகனாலயங்களை மனத்தில் நினைந்த வண்ணம் புகழ்பெற்ற பெரிய முருகன் கோவிலை எதிர்பார்த்துக் கற்பனை பண்ணிக்கொண்டு செல்பவர் அங்கு சிவாலயத்தையே காண முடியும்.

அடியார்களின் வருகையால் வயலூர் கிராமம் சனம்நிறைந்ததாக இருக்கிறதேயன்றி இக் கிராமம் உண்மையில் வயல்கள் நிறைந்த ஒரு அமைதியான 'வயலூர்' ஆகவே பசுமைப்பசேலெனக் காட்சி தருகின்றது

ஆலயத்தின் மதிற்சுவர்களில் பல திருப்புகழ்ப் பாடல்கள் கல்லெழுத்தில் விளங்குகின்றன மேற்கு மதிற்சுவரில் திருமுருகாற்றுப்படை முழுவதும் இருப்பதும் சிறப்பம்சமாகும். [தொடரும்]


A/L 86

DAY CLASS

ஆரம்பம் 19-09-85 காலை 8-00 மணி

(எமது வழமையான ஆசிரியர் குழு)

விபரங்கட்கு:

NEW MASTER INSTITUTE

BMC Lane, Jaffna.


## பருத்தித்துறை நகரசபை

# பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்—1986

1986-ம் ஆண்டுக்கான குத்தகைக்கு பகிரங்க ஏலவிற்பனை மூலம் குத்தகைத் தொகை திர்ணயிக்கப்படும் 1985-09-26-ந் திகதி வியாழக்கிழமை அட்டவணையில் குறிப்பிட்ட குத்தகைகள் குறிப்பிட்ட இடங்களில் ஏலவிற்பனை ஆரம்பிக்கப்படும். குத்தகை ஏலத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் குறிப்பிட்ட தொகைக்குரிய வைப்புப்பணம், படிவக்கட்டணம் ஆகியவற்றை 1985-09-25-ந் திகதி பிற்பகல் 1-00 மணிக்குப் பிந்தாமல் அலுவலகத்தில் செலுத்தி தங்கள் பெயர்களைப் பதிந்து கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

அட்டவணை

| | விபரம் | ஏலவிற்பனை வைப்பு | படிவக் கட்டணம் | ஏலவிற்பனை நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|
| 1. | மரக்கறிச் சந்தை | 1500/- | 100/- | முற்பகல் 10-00 மணி தொடக்கம் | மரக்கறிச் சந்தை வடக்கு வாசல் |
| 2. | வான் வண்டி நிலை | 1500/- | 100/- | ,, | ,, |
| 3. | பஸ்நிலைய துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 250/- | 25/- | ,, | ,, |
| 4. | மீன் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 250/- | 25/- | ,, | ,, |
| 5. | மீன் சந்தை | 1500/- | 100/- | முற்பகல் 11-00 மணி தொடக்கம் | மீன் சந்தை நுழைவாசல் |
| 6. | மாட்டிறைச்சிக் கடை இல. 1 | 1500/- | 100/- | ,, | ,, |
| 7. | மாட்டிறைச்சிக் கடை இல. 2 | 1500/- | 100/- | ,, | ,, |
| 8. | ஆட்டிறைச்சிக் கடை | 500/- | 50/- | ,, | ,, |

குறிப்பு:

(1) மாட்டிறைச்சிக் கடை இல. 1ம் 2ம் இவ்வருடம் ஒன்றாகச் சேர்த்துக் குத்தகைக்குக் கொடுக்கப்படும்

(2) பஸ் நிலையத்திலும், மீன் சந்தையிலும் உள்ள துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் இவ்வருடம் ஒன்றாகச் சேர்த்துக் குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

சு. பத்மநாதன்<br>
செயலாளர்,<br>
நகரசபை,<br>
பருத்தித்துறை.

நகரசபை அலுவலகம்,<br>
பருத்தித்துறை,<br>
05-09-1985.

(639)

# 'உள்ளத்தாலும் செயலாலும் பாரதி ஒன்றாக வாழ்ந்தான்'

(யாழ்ப்பாணம்)

"பாரதிஉள்ளத்தாலும் செயலாலும் ஒன்றாக வாழ்ந்தவன், உண்மைக்காக வாழ்ந்தவன். இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் எதைச் சொன்னானோ அதைச்செய்துகாட்டி வாழ்ந்தவன்"

இவ்வாறு யாழ் சனசமூக நிலைய மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பாரதி விழாவில் பேசுகையில் எழுத்தாளர் சொக்கன் குறிப்பிட்டார்

மாணவர் மன்றத் தலைவர் செல்வன் கே வாகீசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு க சொக்கன் மேலும் பேசுகையில், "பாரதி வாக்கு சாதுர்யம் உள்ளவன் எதற்கும் உடன் பதில் பேசுபவன் தீமையைக் கண்டால் வெறுப்பான் எனவேதான் பாஞ்சாலி சபதத்தில், திரௌபதை துச்சாதனனால் வீதிவழியே இழுத்துவரும்போது அங்கு நின்றிருந்த மக்கள் சும்மா வேடிக்கை பார்த்திருப்பதைப் பொறுக்காமல் 'பேடிகள்' என்று பாடினான்" என்றார்.

வித்தியாலய அதிபர் திரு. மு. இராமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார் கல்வி அதிகாரி திரு பொ. சோமசுந்தரமும் பேசினார் பாடசாலை மாணவர்களின் கவியரங்கும் இடம்பெற்றது. (ஐ)

## வான் மோதி சிறுமிக்கு காயம்

(யாழ்ப்பாணம்)

விளையாடிக் கொண்டிருந்த சிறுமி தெருவைக்கடக்க முற்பட்டவேளை எதிரே வந்த வானொன்று மோதியதில் சிறுமி பலத்தகாயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

சித்தங்கேணியைச் சேர்ந்த இ ஜெயரூபி என்ற சிறுமியே மேற்படி விபத்துக்குட்பட்டு சிகிச்சை பெற்று வருபவராவார். (ச)

## பேரின்பநாயகம் லண்டன் பயணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் தலைவரும் பொலிஸ் அதிபருமான திரு எஸ். பேரின்பநாயகம் லண்டன் சென்றுள்ளார்.

உலக உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சம்மேளனம், லண்டனில் நடாத்தும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான விரிவுரையாளர் பயிற்சியில் கலந்துகொள்வதற்காகவே திரு. எஸ் பேரின்பநாயகம் லண்டன் சென்றுள்ளார்

உலகெங்கிலுமிருந்து பிரதிநிதிகள் மேற்படி விரிவுரையாளர் பயிற்சி வகுப்பில் கலந்துகொள்கின்றார்கள் இப் பயிற்சி வகுப்பு இம்மாதம் 16ம் திகதியிலிருந்து 23ம் திகதிவரை நடைபெறுகின்றது

திரு. பேரின்பநாயகம் லண்டனிலிருந்து மேற்கு ஜேர்மனி, சுவிற்சலாந்து ஆகிய நாடுகளுக்கும் சென்று அங்குள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர்கள் சம்மேளனத்தின் ஆலோசனைகளையும் பெறவிருக்கின்றார்.

இவர் யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர்சங்கத்தின் பிரதிநிதி என்பதும் குறிப்பிடத்தக்கது. (வி)

## யாருடையது

சுதுமலை வடக்கைச் சேர்ந்த திரு. எஸ். தியாகராசா என்பவர் கொக்குவில் ஸ்ரேசன் வீதியில் ஒரு மூக்குக்கண்ணாடியை கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் அலுவலக நேரத்தில் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.


**உஷா மினி**

10-30, 2-30, 4-45, 6-45

INGLORIOUS BASTARDS

**லிபேர்ட்டி மினி**

10-30, 2-30, 4-45, 7-00

**Eagles Attack at Dawn**

**ராஜா மினி**

தினசரி 4-30, 6-30

Fred Ward

UN COMMON VALOUR

(War Film

1977ம் ஆண்டு வியட்நாமில் நடந்த யுத்தக்காட்சிகள் நிறைந்த பயங்கர தாக்குதல், குண்டு வீச்சுக்கள், துப்பாக்கி சமர்.

**சரவணபவன் மினி சினிமா**

(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

4 x 4 திரையில்

10-30, 2-30, 4-30, 7-00

John Saxon in

PRISONERS OF THE LOST UNIVERSE

(மறைந்த மண்டலத்தின் கைதிகள்)

(வயது வந்தோருக்கு மட்டும்)

**ராஜன்லி மினி**

3"X3" திரைவாவில்

10-30, 12-30, 2-30

4-30, 6-30

Sophia Laurance in

**Sun Flower**

(Love story)

இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போது தனது காதலியைப் பிரிந்து போருக்குச் செல்லும் ஒரு வீரனின் காதல் காவியம்.

**வெலிங்டன்**

10-30, 2-30, 6 30,

பாக்கியராஜ்- அம்பிகா நடித்த

**அந்த ஏழு நாட்கள்**

**றீகல் சினிமா**

10-30, 2-30, 6-30

3-வது மாதமாக ஓடுகிறது!

இளையராஜாவின், சிவச்சந்திரன், பூர்ணிமா ஜெயராம், சித்ரமிதா, ஜெய்சங்கர் நடித்த

வாசு மகேந்திராவின்

**நீங்கள் கேட்டவை**

சக்கிமகள் வரி


# இன்றைய பலன்

மாதம்: புரட்டாதி
திகதி: 1 (1985-9-17)
கிழமை: செவ்வாய்
திதி: திருதியை
நட்சத்திரம்: சித்திரை

மேடம்: வாழ்க்கை புதிராக தோன்றும். கனிவான சம்பவங்களும் இடம்பெறும். கடமையிலும் ஆர்வம் பிறக்கும். கனிவான தினம்.

இடபம்: பிரயாணத்தின் போது பொருள் நழுவக்கூடும். முடக்கிய வேதனம் கவலையைத் தரலாம். விரக்தி நிலையும் தோன்றும்.

மிதுனம்: கலைஞர்கள் போற்றப்படுவர். வெளியூரிலிருந்து செய்தியும் கிட்டும் தரும காரியங்களிலும் ஈடுபடுவீர்கள்.

கடகம்: வாகனத்தின்மூலம் அதிக பொருள்வரவிற்கிடமுண்டு. புதுமையான செய்தியொன்றும் கிட்டலாம் மனச்சிறப்புமுண்டாம். சுபதினம்

சிங்கம்: துள்ளிவரும் வெள்ளிப்பணம். நன்மையான விடயங்களை ஏற்படுத்தும். குடும்பத்திலும் பரவசம் தோன்றும் தொழில் லாபங்களுமுண்டு. வெற்றிகரமான தினம்.

கன்னி: எதிர்பாராத நஷ்டத்திற்கு இடமுண்டு. மூகமன் கூறுவோர் விடயத்தில் எச்சரிக்கையாயிருக்கவும் ஆயுதங்களுடன் பழகுபவர்கள் அவதானம் வேண்டும்.

துலாம்: வாழ்க்கையில் கொந்தழிப்பான நிலைமை தென்படும். சிலர் குறைகேட்கவும் நேரிடும். பெண்கள் மிகவும் அவதானமாயிருக்கவும்.

விருச்சிகம்: இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசன மகிழ்ச்சியுமுண்டு தொழில்துறையிலும் வெற்றிக்கிடமுண்டு.

தனுசு: மனப்போராட்டங்கள் நடைபெறும். தொழில் புரியுமிடத்திலும் ஏமாற்றத்திற்கிடமுண்டு. வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

மகரம்: மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர் வருகையால் கலகலப்பு ஏற்படும். புதிய முதலீடுகளுக்கும் நன்று.

கும்பம்: கனிவான சம்பவங்கள் இடம்பெறும். அபிப்பிராயபேதங்கள் மறைந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர். குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சிதரும்.

மீனம்: பிணிக்கு இடம் கொடாது நடக்கவும். இடர்கள் பல தாக்கும். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும். அவதானம் வேண்டும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## அராலி இந்து முதலிடம்

(யாழ்ப்பாணம்)

கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட யாழ் மாவட்டபாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப்போட்டியில் சகலபாடசாலைகளிருந்தும் பங்குபற்றிய 14 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் அராலி இந்துக் கல்லூரி முதலிடம் பெற்று அதற்கான வெற்றிக்கிண்ணத்தையும் சான்றிதழையும் பெற்றுக் கொண்டது.

சகல பாடசாலை மாணவர்களினது அணிவகுப்புப்போட்டியிலும் மேற்படி பாடசாலையே முதலிடத்தைப்பெற்று வெற்றிக்கேடயத்தைத் தட்டிக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிக்கான பரிசில்களை யாழ் இந்துக்கல்லூரி அதிபர் வழங்கினார் (ச)

## சைவப்புலவர் சங்க வெள்ளி விழா

(பண்டத்தரிப்பு)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் தனது வெள்ளி விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மத்தியில் திருமுறை பண்ணிசைப்போட்டியொன்றை அடுத்த மாதம் நடாத்தவுள்ளது

மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு என்று மூன்று பிரிவுகளாக நடாத்தப்படவுள்ள இப்போட்டிக்கான விதிகளையும், விண்ணப்பப் படிவங்களையும் போட்டியின் செயலாளர் சைவப் புலவர் திரு வ. கந்தசாமி சகல பாடசாலை அதிபர்களுக்கும் இவ்வாரம் அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை மேற்படி சங்கம் வெள்ளிவிழாவை முன்னிட்டு விசேட மலர் ஒன்றையும் வெளியிடவுள்ளது நாட்டிலுள்ள சகல சைவப் புலவர்களின் சுய விபரங்களும் மற்றும் சைவசமய அறிஞர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் இந்த மலரில் இடம்பெறுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

## சமூக சேவைப் பகுதியில் இயங்குகிறது

(வவனியா)

செட்டிக்குளம் உதவி அரச அதிபர் பணிமனை வவனியா கச்சேரி சமூக சேவை பிரிவு கட்டிடத்தில் இயங்குகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பண்டத்தரிப்பு சமாதான சபை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சமாதான சபையின் விசேட பொதுக்கூட்டம் 21ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சபைத் தலைவர் திரு. ஏ. வி. துரையப்பா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பிரதம அதிதியாக சண்டிருப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

## தபாலகங்களில் ஆலோசனைச்சபை

(பண்டத்தரிப்பு)

தபால் அலுவலகங்களின் செயற்பாடு சுமுகமாக நடைபெற ஆலோசனை கூறுவதற்காக யாழ் மாவட்டத்திலுள்ள தபால் அலுவலக ஆலோசனை சபைகள் நிறுவப்பட வேண்டும் என்று சுற்றறிக்கையொன்றை தபால் திணைக்களம் வெளியிட்டுள்ளது

இந்த ஆலோசனை சபை தற்போது நடைமுறையில் இருக்கும் தபால் அலுவலக ஊழியர் குழுவுடன் மேலதிகமாக இயங்கி வரும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தச்சபையின் தலைவராக தபால் நிலைய அதிபரே பதவி வழியாக தெரிவு செய்யப்பட வேண்டும் என்றும் செயலாளராக தபால் நிலைய ஊழியரே கடமையாற்ற வேண்டும் என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இப்படியும் நடக்கிறது

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒரு முறை (திரைப்படத்தில் தான்) தமது போட்டியாளரிடம் கேட்டார்: உருவமில்லாத கல் எது என்று. பின்னர் அவரே பதிலையும் சொன்னார் இப்படி: கொடுக்கல், வாங்கல், விக்கல்.........

இப்படியான ஒரு உருவமில்லாத கதை தான் தற்திக்கதை.

தந்திக்கு ஒரு வடிவ அமைப்பு இருக்கிறது ஆனால் வதந்திக்கு? லேட்டஸ்ட் வதந்தி இது:

.........கத்தி, பொல்லு,......வாள்,......! இது ஒரு வதந்தி மற்றையது.........நாளைக்கு பதினெட்டாம் திகதியாம்.

— ஊடுருவி

## சங்கானை ப. நோ. கூ. சங்க புதிய பணிப்பாளர் சபை ஒருமனதாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சங்கானை ப. நோ. கூ. சங்கத்தின் புதிய பணிப்பாளர் சபை நேற்று தெரிவுசெய்யப்பட்டது. கடந்த மாதம் 30ம் திகதி நடந்த மேற்படி சங்கப் பொதுச் சபை உறுப்பினர் கூட்டத்தில் விடுக்கப்பட்ட ஏகோபித்த வேண்டுகோளையடுத்துப் பணிப்பாளர் சபை ராஜினாமா செய்திருந்தது.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. மு. கந்தையா தலைமையில் கூட்டப்பெற்ற நேற்றைய கூட்டத்தில் பொதுச்சபை உறுப்பினர்களால் ஏகோபித்த முறையில்போட்டியின்றி புதிய பணிப்பாளர் சபைக்கு 7 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள் அவர்கள் விபரம் பின்வருமாறு: நா. சிவசுப்பிரமணியம் (தலைவர்), கா. அரிச்சந்திரா (உப தலைவர்), வை. செந்தில்நாதன், ச. முத்துக்குமாரு, இ. அருணநிதி, கா. ச. சற்குணாநந்தன், செ. வீரபத்திரன் (ச)

## பிள்ளையார் கோவில் உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி அருள்மிகு அரசகேசரிப்பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 18ம் திகதி (நாளை) புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்


## மின்தறி நெசவாளர்கள் (பெண்கள்)

யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற மின்தறி நிலையத்துக்கு பெண் நெசவாளர்கள் உடன் தேவை. 25-09-85க்குள் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 751,
C/O ஈழநாடு,
யாழ்ப்பாணம்

(751)


## உருக்கமான வேண்டுகோள்

கடந்த 5-7-85 அன்று ஆயுதம் தாங்கிய இளைஞர்களால் புளியங்குளத்தில் வைத்து எமது யானைமார்க் குளிர்பானங்களுடன் கடத்தப்பட்ட 26 Sri 2263 இலக்க லொறியில் இருந்த சாரதியையும் கிளீனரையும் கருணை கூர்ந்து மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யும்படி அதனைக் கடத்தியவர்களுக்குக் கோரிக்கை விடுக்கின்றோம். சாரதிக்கு மனைவியும் ஆறு பிள்ளைகளும் உள்ளனர். கிளீனருக்கு வயதில் குறைந்த ஐந்து சகோதரர்கள்; தந்தை இல்லை இவர்களிருவரது வருமானத்தில்தான் இவர்கள் குடும்பங்கள் நடக்கின்றன. இவர்கள் இருவரும் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். இவர்களை எம்மிடம் ஒப்படைப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்,
113 1/1 கண்டி வீதி,
கிளிநொச்சி. (755)

## மரண அறிவித்தல்
### சுப்பிரமணியம் முத்துலிங்கம்

காலஞ்சென்ற திரு சுப்பிரமணியம் (முன்னாள் ரயில்வே பகுதி உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மகன் முத்துலிங்கம் சவூதி அரேபியாவில் காலமானார். இவர் திரு கோபாலசிங்கம் (ரயில்வே பகுதி, திருகோணமலை), செல்வசிறீ ஓய்வுபெற்ற ரயில்வே உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரராவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. செல்வசிறீ
கனகசபை ஒழுங்கை,
காங்கேசன்துறை

(753)

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

'தர்மர்' சடலத்துடனிருந்த

# பிரசுரம் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

தமிழ் ஈழத்தைக் காட்டிக் கொடுப்பவருக்கும், தமிழ் ஈழத்தை அடகு வைப்பவர்களுக்கும் குறிப்பாக கூட்டணியினருக்கு இதுதான் தண்டனை''.

யாழ். நீதிமன்றத்தில் முன்னாள் மானிப்பாய் எம். பி. வி. தர்மலிங்கத்தின் சடலத்தின் அருகில் கண்டெடுக்கப்பட்டதென்று சமர்ப்பிக்கப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் மேற்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ். நாகராசா முன்னிலையில் தருமலிங்கத்தின் மரணவிசாரணை நடைபெற்றபோது சாட்சியமளித்த மா. செல்வராசா இத்துண்டுப் பிரசுரத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இறந்தவரின் நலனைக் கவனிக்க சட்டத்தரணி ஆர். விசுவநாதன் ஆஜரானார்.

சாட்சியமளித்த மா. செல்வராசா அத்துண்டுப் பிரசுரத்தில் உள்ளவற்றை வாசித்தார். துண்டுப்பிரசுரத்தின் அடியிலும், பின்பக்கத்திலும் 'மனமுள்ள தமிழன்' என்று எழுதப்பட்டிருந்தது.

இத்துண்டுப் பிரசுரத்தை தர்மலிங்கத்தின் சடலத்தின் அருகே கண்டெடுத்ததாகவும் அதனை நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் கூறினார்.

குமாரசாமி ரவீந்திரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இறந்தவர் என் ஒன்றுவிட்ட அண்ணன். சம்பவதினம் இரவு தர்மலிங்கம் வீட்டிற்கு தொலைக்காட்சி பார்க்கப் போனேன். திருமதி தர்மலிங்கமும், தாயாரும் அங்கு இருந்தனர். திரு. தர்மலிங்கம் இருக்கவில்லை. தொலைக்காட்சி போட்டுப் பார்த்துக்கொண்டிருந்தேன். வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. வெளியே போய்ப்பார்த்தேன். இனந்தெரியாத நபர்கள் இறங்கி வந்தார்கள். இந்த நேரத்தில் எதற்காக வந்தீர்கள்? என்று கேட்டேன். 'நாங்கள் சந்திக்க வரவில்லை. ஆலாலசுந்தரம் காருக்குள் இருக்கிறார். தர்மலிங்கத்தை சந்திக்க வேண்டுமாம்' என்று கூறினார்கள்.

'நான் திருமதி தர்மலிங்கத்திடம் போய் அதனைக் கூறினேன். 'குமாரவேற்பிள்ளை வீட்டு கலியாணவீட்டில் அவர் நிற்பதாகவும், போய் அறிவிக்குமாறும்' திருமதி தர்மலிங்கம் கூறினார். நான் கலியாண வீட்டிற்குப் போய் அங்கு நின்றவர்களிடம், ஆலாலசுந்தரம் வந்திருப்பதாக தர்மலிங்கத்திடம் கூறும்படி சொன்னேன். தருமலிங்கம் சைக்கிளில் புறப்பட்டார், நானும் அவர் பின்னால் போனேன்.

'காரின் முன் ஆசனத்தில் ஆலாலசுந்தரத்துடன் தர்மலிங்கம் இருந்தார். பின் ஆசனத்தில் மூன்று அல்லது நான்கு பேர் இருந்தார்கள். கார் இலக்கத்தை கவனிக்கவில்லை, கார் நிறமும் தெரியாது. இருட்டாக இருந்தபடியால் வந்தவர்களை அடையாளம் காணமுடியவில்லை.

'தர்மலிங்கத்தின் சைக்கிள் வெளியில் காணப்பட்டதால் எனக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அயலவர்களுக்கும் சொன்னேன், அன்றிரவு அங்கு தங்கி தேடிப்பார்த்தேன். காலையில் தர்மலிங்கம்வரவில்லை. அவரை சுட்டுப் போட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்.'

### சட்டவைத்திய அதிகாரி

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் என். சரவணபவானந்தன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: 'தர்மலிங்கம் உடலில் 9 வெளிக்காயங்கள் காணப்பட்டன. 1,2,3,4 சம்பந்தப்பட்ட உட்காயங்கள் காணப்பட்டன. 1,2,3,4, காயங்கள் குறைந்த வேகம் உள்ள 'றைபிள்' துப்பாக்கியினால் ஏற்பட்டவை. 5, 6, 7 முன்கூறிய உட்காயங்களின் வெளிக்காயங்களாகும். 8 வது காயம் ஒரு மொட்டை ஆயுதத்தினால் ஏற்பட்டதாகும். இக்காயத்தினால் அவரின் கீழ்நாடி எலும்பு முறிந்திருந்தது. இந்தமுறிவுக் காயம் ஒரு மொட்டை ஆயுதத்தினால் பலமாக அடித்ததினால் ஏற்பட்டிருக்கலாம். காயம் துப்பாக்கி சோங்கினால் அடித்ததால் ஏற்பட்டிருக்கும். காயம் ஏற்பட்டு 15 நிமிடத்திற்கு உயிருடன் இருந்திருப்பார். 9-வது காயம் ஒரு உரசல் காயமாகும். இது இடது கையில் உள்ளது. (க)

## மீண்டும் கடன்வழங்கும் திட்டம்

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியால் கடந்த இரண்டரை வருடங்களாக இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மீன்பிடித் தொழிலுக்கான கடன் வழங்கும் திட்டம் மக்கள் வங்கி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்திய தன் விளைவாக மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலத்தில் மீன்பிடித் தொழிலாளர்கள் பெற்ற கடனை திருப்பி செலுத்துவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாகவே புதிய கடன் வழங்கல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. (ச)

## பேராதனை விவசாயபீட மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பேராதனை விவசாய பீடத்துக்கு இவ்வருடம் தெரிவுசெய்யப்பட்ட தமிழ் மாணவர்கள் இம்மாதம் 20-ம் திகதி காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழகப் பொது அறையில் கூடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

விவசாயபீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் நிலைமை குறித்து ஆராய்வதற்காக இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வைத்தீஸ்வரா முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வட்டார பாடசாலைகளுக்கிடையே நேற்று நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் வைத்தீஸ்வராக் கல்லூரி இரண்டு முதலிடங்களையும், இரண்டு இரண்டாமிடங்களையும் பெற்றுள்ளது.

இ. கிருபாமூர்த்தி 19வயதுக்குட்பட்டோர் பிரிவில் 1500 மீட்டர், 3000 மீட்டர் அகியவற்றில் முதலாம் இடத்தையும், க. சந்திரகாந்தன் குண்டெறிதல் போட்டியில் இரண்டாம் இடமும், க. அருந்தவராசா முப்பாய்ச்சலில் இரண்டாம் இடமும் பெற்றுள்ளனர்.

நாடுகடத்தல் உத்தரவை

## வாபஸ் பெறக் கோரி சத்தியேந்திரா தந்தி

(லண்டன்)

தம்மீது பிறப்பிக்கப்பட்டுள்ள நாடுகடத்தல் உத்தரவை வாபஸ் பெறுமாறு கோரி, சட்டத்தரணி என். சத்தியேந்திரா இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்திக்கு லண்டனிலிருந்து தனிப்பட்ட தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளார். (பி)

### யாழ். மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை விடுதலை செய்யக்கோரியும், அரசின் திட்டமிட்ட கல்விச் சீரழிப்பை எதிர்த்தும் பதவி உயர்வுகளில் தமிழ் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்படுவதை ஆட்சேபித்தும், வசதிசேவைகள் கட்டண ஆசிரியர்களை நிரந்தரமாக்கக் கோரியும், மலையக மக்களின் பிரஜாவுரிமை, கல்வி சம்பந்தமாக அரசின் போக்கைக் கண்டித்தும், சிங்கள ஆசிரியர்களுக்கு இராணுவப் பயிற்சி கொடுப்பதை எதிர்த்தும் இம்மாபெரும் ஊர்வலத்தை ஏற்பாடுசெய்திருந்தது.

இருபாலை தமிழ் வித்தியாலயத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. மாட்டு வண்டியில் ஒலிபெருக்கி பூட்டப்பட்டு கோஷங்கள் எழுப்பப்பட்டன. முன்னணியில் ஆசிரியைகளும் அவர்களைத் தொடர்ந்து ஆசிரியர்களும் வந்துகொண்டிருந்தனர். ஆசிரியர்களின் கைகளில் சுலோக அட்டைகள் காணப்பட்டன.

ஊர்வலத்தின் முன்னால் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாலிங்கம், நிர்வாகச் செயலர் திரு. எஸ். அருணகிரிராசா, யாழ் மாவட்டச் செயலாளர் திரு எஸ். சிவபாலசிங்கம் வந்துகொண்டிருந்தனர். ஊர்வலம் பருத்தித்துறை வீதி வழியேவந்து யாழ். கல்வித் திணைக்களத்தை அடைந்தது. அங்கு மகஜர் ஒன்றினை யாழ். பிரதம கல்வி அதிகாரி திரு. வே. சபாநாயகத்திடம் கையளித்தனர். மகஜரை இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கல்வித் திணைக்கள மைதானத்தில் கூட்டம் நடந்தது.

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சகல தொகுதிகளிலுமிருந்து ஆசிரியர்கள் இவ்வூர்வலத்தில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

### இலங்கை நிலைமை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் திரு டிக்ஸித் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை சந்தித்து திரு ராஜீவ் காந்தியின் கவலையைத் தெரிவித்தார்.

இலங்கையில் பொது மக்களைப்பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா கூடுதல் கவனம் எடுக்கவேண்டும் என்று திரு. ராஜீவ் வலியுறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (து)

### நிரந்தர யுத்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கும் உரிமை அரசுக்கு உண்டென அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்நாட்டின் இனப் பிரச்சினைக்கு அமைதியான நடைமுறைச் சாத்தியமான தொரு தீர்வினை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கு உதவும் வகையில் சகல தமிழ்க் குழுக்களுடனும் இந்திய அரசு தொடர்புகொண்டு எடுத்து வந்த முயற்சிகளை இலங்கை ஆழ்ந்த உணர்வுகளுடன் கவனித்து வந்துள்ளது'' என அறிக்கை தெரிவிக்கின்றது.

தமிழ்த் தீவிரவாதிகள் - ஆயுதப் படையினர் யுத்த நிறுத்தம் நீடிக்கப்பட்டது குறித்து தேசிய பந்தோபஸ்து அமைச்சர் நேற்று செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்; இந்த யுத்த நிறுத்தம் நிரந்தரமாகவே இருக்குமென்று தாம் எதிர்பார்ப்பதாகக் கூறினார்.

### டில்லியில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஈழ தேசிய விடுதலை முன்னணி நேற்று அறிவித்தது அவர்களின் விபரம் வருமாறு: திரு. இரத்தினசபாபதி, திரு பாலக்குமார், திரு. வே பிரபாகரன், திரு. திலகர், திரு சுப்பிரமணியம், திரு. கே. பத்மநாபா, திரு ஸ்ரீசபாரத்தினம், திரு. சார்ள்ஸ்.

3-வது டெஸ்டில்

## இந்தியா வெற்றிபெறுமா?

(கண்டி)

இலங்கை - இந்தியக் கோஷ்டிகளிடையே கண்டி 'அஸ்கிரிய' விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் நேற்றைய 3-வது நாள் ஆட்டம் முடிவடையும் போது, இந்தியக் கோஷ்டி தனது 2-வது இன்னிங்ஸில், ஒரு விக்கெட் நஷ்டத்துக்கு 149 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

5 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 153 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இலங்கை நேற்று ஆட்டத்தை ஆரம்பித்து, மதியபோசன இடைவேளைக்கு முன்பாகவே மிகுதி விக்கெட்டுகளை மிகவேகமாக இழந்து மொத்தம் 198 ஓட்டங்களைப் பெற்றது. காப்டன் டுலிப்மெண்டிஸ் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் இந்தியக் கோஷ்டியின் சுழல்பந்து வீச்சுவீரர் மணிந்தசிங் 31 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இந்தியக் கோஷ்டி தனது 2 வது இன்னிங்ஸை சிறப்பாக ஆரம்பித்தது

ஆரம்ப துடுப்படி வீரர்களான ஸ்ரீகாந்தும், ரவிசாஸ்திரியும் சேர்ந்து 74 ஓட்டங்களைப் பெற்றபோது ஸ்ரீகாந் 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஸ்ரீகாந்தின் 47 ஓட்டங்களில் '9 பவுண்றி'கள் அடங்கும். இவர் வசந்த டிமெல் வீசிய ஒரு ஓவரில் அடுத்தடுத்து நான்கு பவுண்றிகளை 'வீழாகியது' குறிப்பிடத்தக்கது.

நேற்றைய ஆட்டம் முடிவடையும்போது ரவி சாஸ்திரி 68 ஓட்டங்களுடனும், அமர்நாத் 28 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருக்கின்றனர்.

தற்போதைய நிலையில் இந்தியக் கோஷ்டி, இலங்கைக் கோஷ்டியைவிட 200 ஓட்டங்கள் கூடுதலாகப் பெற்று நல்லநிலையில் இருக்கின்றது வி)

## ''புதிய வெளியீடுகளை ஊக்குவிப்போம்''

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் 'ஈழம் செய்திப் பலகை'யின் இன்றைய தகவல் இது:

''வக்கரித்த மனித உணர்வுகளுக்குத் தீனி போடும் நச்சுக் கலை இலக்கியங்களை தூக்கிவீசி நமது யுத்தக்களத்தைத் தம்கருப்பொருளாய்க் கொள்ளும் புதிய கலை இலக்கிய வெளியீடுகளை ஊக்குவிப்போம் நாடகங்கள் 'நாம் சிந்திய இரத்தம்' 'மண்ணும் புதையும்' தெருக்கூத்து: 'விடுதலைக்காளி' 'மாயமான்' இசைவடிவில்: வில்லிசை, கவிதா நிகழ்வு ஒலிப்பதிவு நாடாக்கள் மற்றும் கவிதைத் தொகுதிகள் சிறுகதைத் தொகுதிகள், நாவல்கள்.

தவறான செய்தி:- நேற்று குப்பிளானில் இராணுவம் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இருவர் பலியானர் என்ற செய்தி தவறானது.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under ramber B 10036/81 Eelananu P. O. Box: 49, Telegram: Eelanabu Telephone: 22389 — 24186

## மரண அறிவித்தல்

### ஏ. கே. செல்லையா

30. யாழ் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஏ. கே. செல்லையா (பேப்பர்) காலமானார். இவர் திருமதி பாக்கியம் செல்லையாவின் அன்புக்கணவரும், திரு. எஸ். மகாதேவா (ராஜன்ஸ் றேடியோ உரிமையாளர்) அவர்களின் அன்புத் தந்தையும், திரு. எம். வி. சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 17-09-85 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூண்டாய் மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள், இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

772 செ. மகாதேவா (மகன்)

## மரண அறிவித்தல்

### திரு செல்லப்பாபிள்ளை இராமச்சந்திரன்

(இளைப்பாறிய கணக்குப் பரிசோதகர் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்)

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செல்லப்பாபிள்ளை இராமச்சந்திரன் 15-9-85 இல் காலமாகிவிட்டார் இவர் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், ராஜினி (டுபாய்), ரஞ்ஜினி (அமெரிக்கா), ராமதாஸ் தொழில்நுட்ப உதவியாளர், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும், யோகேஸ்வரன் (கணக்காளர் டுபாய்), Dr சிறீராமரத்தினம் (அமெரிக்கா), சிவரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுத்தமா, ஸ்ரீரங்கநிற்ரு. கோகுலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) 17-9-85 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்கு எடுத்துச் செல்லப்படும்.

707